வாழிய செந்தமிழ்!                                        வாழ்க நற்றமிழ்

வ. உ. சியின்

# வீர கர்ஜனை!

(கப்பலோட்டிய வீரன் வ. உ. சியின் வாழ்க்கை
வரலாறும், புரட்சிப் பேச்சும்)

எழுதியவர் :
ஒ. பிச்சமூர்த்தி

(பதிப்பாசிரியர் : "விஸ்வேஸ்வரி")

★

சமதர்ம நிலையம்
குளித்தலை :: திருச்சி (ஜி)

உரிமை உடையது

முதற் பதிப்பு: 12-10-47

விலை அணா பன்னிரண்டு

42443-A

## காணிக்கை!

போராட்டக் காலங்களில் புறமுதுகிடாது உடல் பொருள் ஆவி அனைத்தையும் அன்னை நாட்டிற்கு உதவிய அன்பர்களுக்கு—தாய்த் தமிழ்த் திருநாட்டு சமதர்ம குடிஅரசு சமைக்கத் திட்டமிடும் தீரர்களுக்கு—கலை மன்னன் பாரதி அவர்கள் கலா மண்டப திறப்பு விழா நாளன்று காணிக்கையாக்குவதில் களிப்படைகிறோம்!

—நிலையத்தார்

விற்பனையாளர்:
முருகன் பதிப்பகம்
குளித்தலை :: திருச்சி (ஜி)

கி. பிச்சமூர்த்தி
'அமுதப் பிரசுராலயம்'

குளித்தலை
12—10—47.

# ஒரு வார்த்தை!

செந்தமிழன்பீர்!

இன்பத் தமிழகத்தை எழுச்சிபெறச் செய்த நீர் நெம்பாளூர் வீர கர்ஜனை வெளிவரும் நூலில், எங்கள் தமிழ்த்திரு நாட்டுப் பிரிவினைக்குப் பாடுபடும் மறத் தமிழர் ம. பொ. சி. அவர்கள் சிறப்புரைக்குப் பின் என்னுரை தேவையில்லை; எனினும் ஆசையின் அளவு எல்லையை மீறுவதால் ஒரு வார்த்தை உரைக்க விழைந்தேன். என் எண்ணத்தைத்தான் புரட்சிக் கவிஞர் தம் பொன்னான இன் கவிதையில் பின்னித் தந்துளார். அது இது:

தாயின்மேல் ஆணை! தந்தைமேல் ஆணை
தமிழகமேல் ஆணை!
தூய என் தமிழ்மேல் ஆணையிட்டேநான்
தோழரே உரைக்கின்றேன்.
நாயினும் கீழாய்ச் செந்தமிழ் நாட்டார்
நலிவதை நான் கண்டும்,
ஓய்தல் இன்றி அவர்நலம் எண்ணி
உழைத்திட நான் தவறேன்.
தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனை என்
தாய்தடுத்தாலும் விடேன்
எமை நத்துவாயென எதிரிகள் கோடி
இட்டழைத்தாலும் தொடேன்.
ஆனஎன் தமிழர் ஆட்சியை நிறுவ
அல்லல்கள் வரின் ஏற்பேன்
ஊனுடல் கேட்பினும் செந்தமிழ் நாட்டுக்
குவப்புடன் நான் சேர்ப்பேன்.

சென்னை மாநில தமிழரசுக் கழகத் தலைவரும் 'தமிழ் முரசு' ஆசிரியருமான

மறத் தமிழர் ம. பொ. சிவஞானம் அவர்களின்

# சிறப்புரை

தமிழ் ஆர்வம் மிக்க இளைஞர் திரு. கி. பிச்சமூர்த்தி. அவர் எழுதிய "வ. உ. சியின் வீர கர்ஜனை" என்ற நூலைக் கண்ணுற்றேன். வீர வணக்கத்தையே இறை வணக்கமாகக் கொண்டவர் தமிழர். இன்றைய நாளில் தமிழர் போற்றி வணங்கக்கூடிய புரட்சி வரலாறு ஒன்று உண்டானல் அது வ. உ. சியின் வரலாறே யாகும்.

ஏகாதிபத்தியம் வெளியேறிவிட்டது என்றாலும், சுதந்திர இந்தியாவில் சுதந்திரத் தமிழகம் தோன்றவில்லை; சோஷியலிச சமுதாயம் உருவாகவில்லை. இந்த இரண்டு உரிமைகளுக்காகவும் தமிழ் இனத்தார் தனிப் போர் துவக்கும் வேளை இது. இந்த நல்ல நேரத்தில் உரிமை உணர்ச்சி கொண்ட தமிழருக்கு வ. உ. சியின் பெருமையை உணர்த்தும் இந் நூலை மகிழ்வுடன் வரவேற்கின்றேன்.

அன்பர் திரு. கி. பிச்சமூர்த்தி இளைஞர்களுக்கே உரிய உள்ளத் துடிப்பை தமது எழுத்திலே காட்டியுள்ளார். அவரது நூற்களுக்கு தமிழகம் மென்மேலும் ஆதரவு காட்டுமாறு வேண்டுகின்றேன். தமிழகத்தில் வ. உ. சியின் புகழ் என்றென்றும் நின்று நிலைபெறுவதாகுக!

8—10—47 }
சென்னை. }

அன்பன்,
ம. பொ. சிவஞானம்.

# "புறப்படு தோழா!"

போர்ப்பறை ஒலிக்கிறது!
போர்வாள் அழைக்கிறது!!
மறத் தமிழனே, புறப்படு!!!

இமயம் வென்று எழில்தமிழ்க் கொடிபறக்கச் செய்த வீரத் தமிழனே! கடாரம் வென்று கன்னித் தமிழின் இன்னிசையை முழக்கிய இன்பத் தமிழனே! இன்றைய உன் இனத் தவர் நிலை என்ன? அரசியலில் அடிமை; மொழியில் கீழ்; கலையில் கடைசி; வீரத்தில் சோரம்; இசையில் வசை... எண்ணினால் இதயம் துடிக்கிறது. என்னரும் தோழா, இன்னிலை நீடித்தால்...!

இந்திய சுதந்திரத்திற்கு இரத்தம் சிந்தினாய். கொடுஞ் சிறை ஏற்றாய், அடி பல பெற்றாய், உள்ளம் நைந்து உருக்குலைந் தாய். தேசியப் படைக்கு முன்னணி நிதம் முழக்கினாய். வேண்டிய பாரத விடுதலைப் பெற்றாய்! களிப்பில் கள்வெறி கொண்டு கன்னித் தமிழகத்தை மறந்துவிட்டாய். தொடர்ந் தாயா உன் தாய்த் தமிழ்த் திருநாட்டு விடுதலைப்பணியை?

பரங்கியை வெருட்டப்பாடுபட்ட தோழா, பண்பாலத் தமிழக விடுதலைக்கு வித்திட்டாயா? அருகே உள்ள ஆந்திரன் கேட்கிறான் அன்னை நாட்டின் சென்னையை! கேரளத்தான் கொக்கரிக்கிறான் கோலத் தமிழகத்தைப் பறிக்க! வடநாட் டான் வண்டமிழகத்தில் வட்டியைப் பெருக்கத் திட்டமிடு கிறான். இங்ஙனம் அன்னியர்கள் எண்ணத்திற் கெல்லாம் இடம் கொடுத்தது நீதியா? நேர்மையா? எண்ணிப்பார் தோழா!

வீரர்வழி வந்த நீ வீணர் பழிக்காளானாயே. மாற்றானுக்கு முன்னோடியாக, வெற்றானுக்கு விருது ஏந்தியாக வாழ்ந்தது போதும்!

தமிழ்க் குடியரசு சமைக்கக் கூடுவோம். சமதர்ம ஆட்சியைத் தமிழகத்தில் எழுப்புவோம். ஆண்டான் அடிமை

என்பதைப் பூண்டோடு ஒழிப்போம். நீண்டான் வேண்டான் என்பதை வேரோடு களைவோம். மமதைப் பிடித்தவர்களை மண்டையிலடிப்போம். ஓரம் செய்பவர்களை ஒழித்துக்கட்டுவோம். இன்பத்தமிழகத்தில் ஒருவனுக்கு இல்லை உணவு உடை கல்வி என்ற பழியை வீழவைப்போம். ஐக்யத் தமிழகத்தில் சௌக்யம் பெறுவோம். வீரர் திருக்கூட்டம் என்பதைப் பாரோர் அறிய முரசு கொட்டுவோம்! புறப்படுத் தோழா, போர்க்களம் நோக்கி!

மேற்கண்ட எங்கள் இன்பக்கனவை நனவாக்க வீரர் வ. உ. சி. வழிகாட்டி உள்ளார். உறங்கிய தமிழனை உணர்ச்சி உலகிற்கு அழைத்துச் சென்றவர் வ. உ. சிதம்பரனார். அவர் தம் வரலாறு அறியாத மக்கள்-அவர் பிறந்த நாட்டில்தான்-அநேகர்! தமிழன் தன் முன்னோர் வீர வாழ்வைச் சிந்திக் காததால் அன்றோ தன் நிலை குலைந்தான்; தாழ்வு பெற்றான்! தாய்நாட்டுத் தொண்டு செய்து சிறைச்சென்று மறைந்த வீரதளபதியின் சுருக்க வரலாறு தான் இந்நூல். அவரது புரட்சிப் பேச்சுக்களின் 'ஒலிப்பதிவு' இது! கப்பலோட்டிய வீரத்தமிழன் வ. உ. சிதம்பரனார் வீரகர்ஜனையை நந்தமிழகத் திற்கு-- உருவாகும் புரட்சிப் படைக்கு—ஒலிபரப்ப முன் வந்துள்ளார் இளந்தமிழ்த் தோழர் கி. பிச்சமூர்த்தி. அவரது முயற்சிக்கு எங்கள் பாராட்டு; நன்றியும் கூட! மறைந்த மா வீரரது மாண்புகளைத் தமிழகத்தில் பரவச் செய்த மறத் தமிழர் ம. பொ. சிவஞானம் அவர்கள் சிறப்புரை நல்கி உள்ளார்கள். அவர் திரட்டும் பெரும் படைக்கு 'வீரர் கர்ஜனை' தெம்பு ஊட்டும் என நம்புகிறோம். அன்னவருக்கும் எங்கள் அன்பு!

நிலையத்தின் முதல் முயற்சி. குறுகிய காலத்தில் உருவாகும் நூலில் குறையிருப்பின் பொறுத்தருள வேண்டுகிறோம். ஆதரவாளர் அனைவருக்கும் எங்கள் நன்றி என்றென்றும்!

தமிழ்நாடு தமிழருக் கென்றே—இந்தச்
சகத்தில் முழக்கிடு முரசே! —பாரதிதாசன்.

12—10—47
சமதர்ம நிலையம்,
குளித்தலை.

அன்பு,
மணி. முத்துசாமி,
பதிப்பாளர்.

# வீர சிதம்பரனார்!

" கள்ளமற்றுக் கலகலத்த பேச்சுகேட்கும்
கருப்பெனினும் சிரிப்புமுகம் கருணைகாட்டும்
குள்ளமென்னும் ஒருஉருவம் இருகை கூப்பி
குண்டெடுத்துக் கடைந்ததெனக் குலுங்கநிற்கும்
வெள்ளையன்றி வேறுநிறம் அறியா ஆடை
வேதாந்த சித்தாந்த ஒளியே வீசும்
கொள்ளைகொள்ளை சிறையிருந்த குறிகள் தோன்றும் "

...............................................

இவைதான் எங்கள் வீரர்வழி வந்த மறத் தமிழன் வ. உ. சிதம்பரனாரின் வண்ண உருவம். தமிழனின் மன உறுதிக்கு ஓர் எடுத்துக்காட்டாய் விளங்கியவர். எல்லா வசதிகள் இருந்தும் எளிமையைத்தான் நேசித்தார். பணமும் படிப்பும் பண்புடன் பெற்றிருந்தும் பார்த்தவர் அதன் செருக்கை அவரிடம் காணமுடியாது. சீரான உணவையும், சௌகர்யமான ஆடையையும் தான் விரும்பினார். செந்தமிழ் நுண்ணறிவு பெற்ற சிதம்பரனார் அன்னிய மொழி பல கற்றும் அதன்பால் அழியா மோகம் கொள்ளவில்லை. தாய்த் தமிழ்ச் சுவையில் தன்னை மறப்பார். சேவையே மூச்சாக வாழ்ந்த சிதம்பர

ஞரை நினைத்திடில் "விதம் பல கோடி துன்பம் அடைந்திடினும் – நாட்டின் விடுதலைக்கே உழைக்க திடந்தரும்" என்கிறார் தேசிய திருக்கவி நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை அவர்கள். ஆம்! அவரது சொற்பொழிவில் புரட்சி பூத்தது; இளைஞர் உலகில் எழுச்சி மலர்ந்தது! அந்நாளில் அதிகார வர்க்கம் அவர்பால் ஐயம் கொண்டதில் ஆச்சரியமில்லை அல்லவா!

**பிறவி வீரர் பிறந்தார்!**

காகம் பறவாத சீமை. பாரதியை ஈன்ற பதி. "வானம் பொழியுது பூமி விளையுது, மன்னனென் காணிக்கு ஏது பணம்?" என்று காந்தி பிறவா அந்த காலத்தில் வரி கொடா இயக்கத்தை வளர்த்த வீரன் கட்டபொம்மு பிறந்த பொன்னாடு. வேண்டிய வெல்லாம் வேண்டியாங் களிக்கும் பாண்டிய நாட்டின் பழம் பெருங்குடியில் 5—9—1872-ம் ஆண்டில் உழுவலன்பர் உலகநாத பிள்ளை அவர்களுக்கும் பரமாயி அம்மைக்கும் புத்திரராகப் பிறந்தார். சிதம்பரனாரின் பெரிய தந்தையாரின் பெயரின் நினைவாகவே அவருக்கு அப்பெயர் இடப்பட்டதாம். செல்வக் குழந்தை சீராக வளர்ந்து ஆண்டு ஆறை அடைந்ததும் பள்ளியில் சேர்க்க விழைவு கொண்டார் உலகநாத பிள்ளை.

**இளமைக் கல்வி!**

பண்டைத் தமிழர் பண்புபடி சிதம்பரனாரின் ஆரம்பப் படிப்பு சாதாரண திண்ணைப் பள்ளிக்

கூடத்தில் தான் ஆரம்பமாயிற்று. 'தமிழ் இலக்கிய ஆராய்ச்சியில் அறிவு முதிர்ந்த ஆசான் அன்பரது தமிழறிவுக்கு மெச்சி அவரை அன்புடன் ஏற்று தமிழ்ச்சுவையினை அமுதெனஊட்டினார். இன்பத் தமிழின் இன்சுவையில் மெய் மறந்த சிதம்பரனாரும் செந்தமிழ் காப்பியங்களை நன்கு பயின்று புலமை பெற்றார். தமிழ்க் கல்வியோடு இராக் காலங்களில் ஆங்கில அறிவையும் அன்பர் ஒருவர் உதவியால் பெற்றார். இந்த ஓய்வு படிப்பு நீடிக்கவில்லை. பள்ளியில் சேர்ந்து முறையாகப் பயில ஆசைகொண்டு அருகிலிருந்த பாடசாலை சென்று பயின்றார், வயது வளர வளர சிதம்பரனாரின் அறிவும் வளர்ந்தது. ஆங்கில மேதைகளின் கூட்டுறவால் கால்டுவேல் கல்லூரியில் சேர்ந்து வெற்றி பெற்றார். மீண்டும் தொடர்ந்து படிக்க சூழ்நிலை இடந்தராமையால் படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்து உத்தியோகத்தில் சிலநாள் கழித்தார்.

## துறவி சிதம்பரனார்

உத்தியோக சிதம்பரனார் உலக நிலையை அறிய விரும்பினார். தாலூகா ஆபீசின் நான்கு சுவருக்குள் அடைபட்டுக் கிடக்க அவருக்கு விருப்பமில்லை. நாட்டின் நிகழ்ச்சிகளைக்காண வேட்கை மிகுந்த சிதம்பரனார் சட்டக் கலையையும் பயில நாட்டம் கொண்டார். அதற்காக ஒட்டப்பிடாரம் என்ற தன் பாட்டனார் ஊருக்குச் சென்று உவகையுடன் படித்தார். இந்நாட்களில் இவருக்கு இல்லத்தில்

ஏற்பட்ட சில இடைஞ்சல்களைப் பொருமல் துறவும் கொள்ள நேரிட்டது. கண்ட இடமெல்லாம் சுற்றினார். மனநிம்மதி பெற்றார் இல்லை. மீண்டும் இல்லம் ஏகி வழக்கறிஞர் பொறுப்பேற்றார். அன்பரது வழக்கறிஞர் பணி 1900-ம் ஆண்டில் தூத்துக்குடியில் ஆரம்பமாயிற்று. இருபத்திரெட்டே ஆண்டைப் பெற்ற வழக்கறிஞரது வரவு மக்களிடையே ஆச்சரியத்தையும் ஆதரவையும் அளித்தது.

### நீதிக்குப் போராடிய தீரர்

இளம் சட்ட நிபுணரின் புகழ் எங்கும் பரவியது. எடுத்துக்கொண்ட வழக்குகளில் எட்டில் ஆறு கண்டிப்பாக வெற்றிபெறும் என்றால் சிதம்பரனாரின் திறமை என்னென்பது? அன்பரது வாக்கு வன்மையும், வழக்கின் நேர்மையும் நீதியை இவர்பால் இழுத்தது. ஏழை என்றறிந்தால் எவ்வித உதவியும் வேண்டாது வழக்கு ஏற்று வாதிடுவார். கமிஷன் என்ற கைக்கூலியை வெறுத்த வழக்கறிஞர் இவர் ஒருவர்தான். ஒரு சமயம் இவரின் உறவினர் ஒருவர் ஒரு கட்சிக்காரரைக் கொண்டுவந்து விட்டு அவர் சென்றபிறகு கமிஷன் கேட்க இதுபற்றித் தம் மனைவியிடம் கலந்து ஆலோசித்தார். அன்பருக்கேற்ற அவ்வம்மையார் "கைக்கூலி பெறுவது கயவர் செய்கை" எனக் கூற சிதம்பரனார் வந்தவரிடம் தக்கபதில் கூறி அனுப்பினார். இங்ஙனம் இளகிய நெஞ்சம் கொண்ட இவர் எடுத்துக்கொண்ட வழக்கின் தரம் "கிரிமனல் கேஸ்கள்" தானாம். இதில்

தான் இவருக்குப் பேரும் புகழும்! இவர் பொருள் ஒன்றையே பிரதானமாக எண்ணியிருந்தால் பெரும் பதவிகள் பல பெற்றிருக்கலாம். உண்மைக்கும் உழைப்பிற்கும் தொண்டனாக இருந்தமையால் துய ரங்கள் பல பெற்றார். இருப்பினும் வஞ்சகங்கள் என எங்காவது அறிந்தால் அஞ்சாமல் களையாமல் இரார். லஞ்சம் பெற்றுவந்த நீதிபதி ஒருவரின் வாழ்வைக் குலைத்தார். இம்மாதிரி இழிதொழில்கள் புரியும் சில உத்தியோகஸ்தர்களை ஒழித்துக் கட்டினார். இவ்வாறு சிதம்பரனாரது வழக்கறிஞர் வாழ்க்கை வளர்ந்தது.

## மனை மாண்பு

சிதம்பரனாரின் வாழ்க்கைத் துணையாக வந்தவர் வள்ளியம்மை என்னும் நல்லாள். குணநலம் கொண்ட கோதை. "வள்ளுவர் குறளை வானுறப் படித்துக் கொள்ளும் விதத்தில் கூறும்" திறன் கொண்டவர். இன்ப நாயகியுடன் இல்லறம் நடத்திய காலை இரு கண் இழந்த கிழவர் ஒருவரைக் காப்பாற்றும் பொறுப்பை சிதம்பரனார் ஏற்க நேர்ந்தது. ஊராரும் உற்றாரும் "ஏற்று உற்றுழி உதவுவது குற்றம்" என செப்பினர். இருப்பினும் இச்செய்தி கேட்ட சிதம் பரனாரின் சஞ்சலத்தைப் போக்க வள்ளியம்மை "எல்லாம் உணர்ந்த என்னுயிர் நாத, கற்பனையாகக் காணும் குலத்தின் சொற் பிழை"என்ச் சொல்லி தேற்றி அத் திண்டப்படாதவரை ஏற்று ஆதரித் தார். குணநல குன்றாக இருந்து சிதம்பரநாரின் மதிமந்திரியாக விளங்கிய வள்ளியம்மையார் 1901-ல்

ஆருயிர் நாதனை விட்டுப் பிரிந்தார். "அன்புமிகு, நல்லாள்" பிரிவால் அன்பர் மனம் நொந்தார்.

## சிதம்பரனாரின் சீரிய பண்பு

செந்தமிழ்ச் செல்வர் சிதம்பரனார் சினம் என்பதை அறியார். அழுக்காறும் ஒழுக்கமின்மையும் அவரிடம் காண்பதரிது. இல்லை என்னும் சொல்லை உரைத்ததில்லை. அறிஞர் கூட்டத்தின்பால் அன்பும் ஆதரவும் காட்டுவார். எதிரி என்பவர் இவரிடம் எவரும் இல்லை. புறம் சொல்லும் புல்லர்கள் உறவு எள்ளளவும் விரும்பார். எவ்வுயிரும் தன்னுயிர் போல் எண்ணி இரக்கம் காட்டும் நெஞ்சு கொண்டவர். எல்லோரும் சமம் என்ற முதுமொழியின் உண்மை உணர்ந்தவர். இத்தகைய இவரது அன்பில் பிணைந்தவர்கள்தான் சுதந்திர தாரக மந்திரத்தை உபதேசித்த திலகரும், மகாகவி பாரதியும், சுப்பிரமணிய சிவாவும், மகான் அரவிந்தரும்!

## செந்தமிழ்ப் பற்று

தமிழரின்பால் சிதம்பரனாருக்கு அளவிலா அன்பு. தமிழில் பேசவும், எழுதவும் ஆசை அதிகம். மதுரைத் தமிழ்ச் சங்கத்திலும், சைவ சித்தாந்த சபையிலும் சிதம்பரனார் உறுப்பினராகி அறிவைப் பெருக்கினார். இந்நாட்களில் செந்தமிழ்ப் பெரியார்கள் உறவு கிடைத்தது. சொற் பெருக்காற்றவும், செந்தமிழ்க்கவி புனையவும் முனைந்தார். சங்க இலக்கியங்களின் சுவையினை ஓர்ந்து உணர்ந்தார்.

தொல்காப்பிய மெனும் நல்காப்பியத்தின் நயம் விளங்க நல்லுரையாத்தார். உண்மையறிவை உலகுக்கு ஈய "விவேகபாநு" என்ற செந்தமிழ்ச் சஞ்சிகையைத் தோற்றுவித்தார்.

**பொதுவாழ்வில் புகுந்தார்!**

இங்ஙனம் சிதம்பரனர் தாய்மொழி வளர்ச்சியில் ஈடுபட்டிருந்த காலை சென்னைச் செல்லும் வாய்ப்பு ஏற்பட்டது. 'அங்கு விவேகானந்தர் மடாலயத்தைச் சேர்ந்த இராமகிருஷ்ணனந்தர் என்பவரைச் சந்திக்க நேர்ந்தது. உரையாடல்களின் இடையில் சிதம்பரனரை இராமகிருஷ்ணனந்தர் 'சுதந்திர சுகவாழ்விற்குச் சாற்றிய தொண்டு யாது?' என்ற கேள்வி கேட்டார். உள்ளபடியே இக்கேள்வி சிதம்பரனரின் சித்தத்தைக் குடைந்தது. பிறவியின் நோக்கம் பெற்ற நாட்டிற்குழைத்தல் என்ற பொன்னன உண்மையை கிருஷ்ணனந்தர் மூலம் உணர்ந்தார். அதுவரை சுதேசியம்பால் சிந்தனைச் செலுத்தாத சிதம்பரனர் உணர்வு கொண்டார். எண்ணத்திற்கு ஏற்றவண்ணம் சூழ்நிலையும் அமைந்தது. வங்காளப் பிரிவினை கிளர்ச்சிபற்றிய எழுச்சி வடநாட்டிலும், சுதேசிய உணர்ச்சிப்பற்றிய நிகழ்ச்சி தூத்துக்குடியிலும் தோன்றின. அவைகளில் கலந்து நாட்டுச் சேவை செய்வதில் நாட்டம் கொண்டார். வெள்ளையர்களின் கொள்ளை பலவழிகளில் நடப்பதை உணர்ந்தார். சரியான பரிகாரம் தேடினர். அதன்பலனக தரும சங்க நெசவு சாலை,

சுதேசிய நாவாய்ச் சங்கம், சுதேசியப் பண்டகசாலை களைத் தோற்றுவித்தார்.

**சிந்தனையின் விளைவு:**

தேசிய உணர்ச்சியில் உந்தப்பட்ட சிதம்பரனர் அடிமைக்கும் மிடிமைக்கும் காரணம் ஆங்கிலேய அரசியல் தத்துவம் என்பதை உணர்ந்தார். வெள்ளை யரின் ஏகாதிபத்திய வெறியையும் பிரித்தாளும் சூழ்ச்சியையும் அறியும் வாய்ப்புக்களைச் சிதம்பரனர் பெற்ருர். வங்காளப் பிரிவினையை எதிர்த்து அகில இந்தியா முழுதும் கண்டனக் கூட்டங்கள் நடை பெற்றன. ஏகாதிபத்திய எதிர்ப்பு முனையைத் தென்னுட்டில் நிறுவ காலத்தை எதிர்நோக்கிய சிதம்பரனர் மேடையேறி மக்களைத் திரட்டினர். அன்னிய ஆடைகளைக் கொளுத்தினர். பரதேசப் பொருள்களை உபயோகிப்பதில்லை என சபதம் செய்து கொண்டார். அடிமை உணர்ச்சியை நினைவு படுத்தும் எச்செய்கையையும், எப்பொருளையும் ஏற்ப தில்லை என முடிவு கட்டினர். வெள்ளையரது கொள்ளை லாபத்திற்கு உதவுவது கப்பல் வாணிபம் என்பதை உணர்ந்து அதன் வளர்ச்சியைத் தடுத்து 'சமாதி' கட்ட திட்டமிட்டார்.

**முதல் போர்!**

அக்காலத்தில் தூத்துக்குடிக்கும் சிங்களத்திற் கும் வாணிபப் பொருள்களை ஏற்றுச் சென்று கொண்டு வரும் பொறுப்பை நிர்வகித்தவர்கள்

"பிரிட்டிஷ் இந்திய ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி" என்ற பச்சை பரங்கியர் கூட்டம். இக்கம்பெனியின் மூலதனம் இந்தியரின் இரத்தத்தில் உருவானது. அதைக்கொண்டே இந்தியரின் சுதேசி ஆர்வத்தை— தேசிய உணர்ச்சியை — அடக்க அவர்கள் திட்டமிட்டனர். அக் கம்பெனியாருடன் தொடர்பு கொண்டுள்ள இந்திய வியாபாரிகளுக்கு ஏற்ற வசதிகள் செய்வதில்லை. நிறபேதத்தையும் ஆதிக்க வெறியையும் சமயம் நேர்ந்தபொழுதெல்லாம் காட்டினர். இவற்றைக் கேட்ட, கண்ட சிதம்பரனார் சினம் கொண்டார். பணம் திரட்ட வந்த பரங்கியரது பாதகச் செயல்களைக் கண்டிக்கக் கச்சைக் கட்டினர். மன்றமேறி மக்களிடம் உண்மையைக் கூறி உணர்வு ஊட்டினர். வெள்ளையனே வியாபாரத் துறையில் தலை சாய்க்கச் செய்ய "சுதேசியக் கப்பல் கம்பெனி" யை இந்தியர் மூலதனத்தில் தன் மூளையின் உதவிகொண்டு 1906-ல் துவக்கினர்.

## ஓயா உழைப்பு!

சுதேச ஆர்வம் தமிழரிடையே வளர ஆரம்பித்தது. சிதம்பரனாரின் எண்ணம் வலுப்படுவதை அறிந்த ஆங்கிலேயர் பலவழிகளில் தங்கள் பலத்தைப் பெருக்கினர். சிதம்பரனாரின் வீர உரைகளில் சிந்தையைச் செலுத்திய தமிழர்கள் சுதேச கம்பெனிக்கே ஆதரவு அளித்தனர். காடுமேடெல்லாம் சுற்றி சுதேச கம்பெனிக்கு ஆதரவு திரட்டினர். வெள்ளையரது வியாபார தந்திரங்களையும், சுதேசிய

மாண்புகளைப் பற்றியும் மக்களிடையே உணர்ச்சி வேகத்தில் சொற்பொழிவு நிகழ்த்தினர். தேவைக் கதிகப் பொருள் திரட்டக்கூடிய சகதியைப் பெற்றார். வடநாடு செல்லும் முன்பு வழியனுப்ப வந்தவர் களிடம் "மீண்டும் வந்தால் கப்பலுடன்; இல்லையேல் வீரமரணம் எய்துவேன்" என்று செப்பிய திரம் யாரே பெற்றார்! சிதம்பரனாரின் சுதேசியப் பிரசா ரத்தின் பலன் தென்னாட்டில் அரசியல் விழிப்பு ஏற்பட்டது. உள்நாட்டுக் கைத்தொழில்களையும், சுதேசிப் பொருள்களையும் ஆதரிப்போம் என மக்கள் மன உறுதி கொண்டனர். வெள்ளையர் தங்கள் வாணிபத்தைப் பெருக்க கப்பல் கட்டணங்களைக் குறைத்தனர். வசதிகளைப் பெருக்கினர். வெள்ளை யரின் எந்த உபாயமும் சிதம்பரனாரின் சொற்பொழி வில் திளைத்தத் தமிழர்களிடம் சாயவில்லை. வீர சிதம்பரனாரை விலைக்கு வாங்கவும் வெள்ளையர் நினைத்தனர். வெள்ளையர் வலையில் சிக்கவில்லை வீரர்! ஆதிக்கவெறி முத்திய ஆங்கிலேயரை அகற்றி சொந்தநாட்டைப் பிறருக்கடிமையின்றி சுதந்திர நாடாக்க அந்த நாளும் வந்திடாதோ என எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்.

அந்த நாளும் வந்தது!

"என்றுதணியும் இந்த சுதந்திர தாகம்?
என்றுமடியும் எங்கள் அடிமையின் மோகம்?
என்றெம தன்னைகை விலங்குகள் போகும்?
என்றெம தின்னல்கள் தீர்ந்து பொய்யாகும்?

என்று வருந்தி யுழைத்தத் தொண்டர்கள் திருக்கூட்டம் தென்னுட்டில் பெருகிற்று. அச்சமே உச்சமாகி யிருந்த அச்சமயத்தில் ஆங்கிலேயனின் ஆதிக்க ஆணி வேரை களைய திட்டமிட்டவர்கள் பலர். அவர்களது புரட்சிப் பேச்சுக்களையும், உணர்வுக் கட்டுரைகளையும் தம் பத்திரிகையில் வெளியிட்டு நாட்டுக் கிளர்ச்சியை வலுப்படுத்தியவர் ஜி. சுப்பிரமணிய அய்யர். வீரர் வ. உ. சியின் அன்பிற்குப் பாத்திரமாக 'அண்ணுச்சி' என்றழைக்கும் பெருமை பெற்ற வாஞ்சி ஐயர் தன் போலீஸ் உத்தியோகத்தையும் உதறிவிட்டு சுதந்திரப்படையில் தொண்டரானுர். வீரர்கள் வ. உ. சியும், சிவாவும் தான் தளபதிகள்.

### திலகரின் தொண்டர்

1907-ம் ஆண்டில் தேசிய மகாசபை அரசியலில் எவ்வித பொறுப்பேற்பது என்ற ஆலோசனையில் ஆழ்ந்தது. வெள்ளையர் அளிக்கும் அரசியல் அலுவல்களில் அமர்ந்தால் போதும், அதுவே போக போக்கியம் என்றனர் சிலர். வெள்ளையர்களின் கொள்ளையடிக்கும் பண்போடு பரங்கியர் கூட்டமும் பறந்தோட வேண்டும் என்று பலரும் பேசினர். இங்ஙனம் தேச சுதந்திரக்கனல் ஜ்வாலை விடும் காலத்தில் மிதவாதிகள், அமிதவாதிகள் கும்பல் காங்கிரஸ் மகா சபையில் பெருகிற்று. தீவிரவாதிகளின் தலைவர் தான் திலகர் பெருமான்! "சுதந்திரம் நமது பிறப்புரிமை; அதைத் தடுக்க எவர்க்கும் இல்லை உரிமை" என சங்கநாதத்தை எழுப்பிய திலகரின் முற்போக்குச்

சக்திக்கு அடி பணிந்தார் அன்பர் சிதம்பரனுர். தென்னுட்டில் சுதேசிய எண்ணத்தை வளர்க்க அரும்பாடு படும் அவர் அரசியல் கிளர்ச்சியில் கலக்க அவாக் கொண்டார். தூத்துக்குடிக்குமட்டும் தன் தொண்டு பயன்படக் கூடாது, தென்னுடு — அகில இந்தியாவுக்கே—சுதேசிய ஆர்வத்தை ஊட்ட அரசியலைப் பயன்படுத்த விழைந்தார். தேசிய மகாசபையில் சேர்ந்து திலகரின் வீர உரைகளுக்கு அடிமையானுர். சூரத் காங்கிரஸ் முறிவுக்குப்பின் திலகரது கருத்தைத் தென்னுட்டில் மூலை முடுக்குகளில் பரப்பினுர். திருநெல்வேலியில் தேசாபிமானிகள் சங்கம் ஒன்றை நிறுவினுர். சுதேசிப்பற்று, தேசியக்கல்வி, புனர் நிர்மானம், சுதந்திர வாழ்வு, வெள்ளேயர் வெறி, அடிமையின் இழிவு ஆகியவைகளேப்பற்றி பொது மக்களுக்கு விளக்கிக் கூறினுர்.

## சிவாவின் அவாவைப் பெற்ருர்!

ஆதியில் ஆங்கிலேயர் தொலேய ஆசைப்பட்டு உழைத்தவர் சிவா என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படும் சுப்பிரமணிய சிவாதான். சர்க்கார் கீழ்த்தர உத்தியோகத்தில் இருந்து, இடுக்கண்பல பெற்று நாட்டுத்தொண்டில் நாட்டம் கொண்டு பொதுப்பணி புரிய புறப்பட்டார். தனக்கு ஏற்ருர் போல் திருநெல்வேலியில் சிதம்பரனுர் கிளர்ச்சி செய்து வருவதை கேள்விப்பட்டார் சிவா. அவரது அன்பைப்பெற முயற்சித்தார். சிவாவின் வரலாற்றை

அறிந்த சிதம்பரனார் தனக்கேற்றத் துணையாகக் கொண்டார். இருவரும் ஒன்றுகக்கூடி வீர உரை ஆற்றக் கிளம்பினர். பொதுக்கூட்டங்களில் பேசுகிறார்கள் என்றால் கும்பல் கடல் என குமுமும். இரு வீர சிங்கங்களும் மேடையில் ஏறி கர்ஜனை செய்தால் தீப்பொறி பளிச்சிடும்; உணர்ச்சி வேகம் எழும்பி நிலை தடுமாறும். ஆங்கிலேயரின் ஆணவத்தை ஆங்காரத்துடன்கூறி மக்களை-பாமர இனத்தையும் புரட்சிச் செய்யத் தூண்டினர். ஏற்கனவே சிதம்பரனார் ஏற்றிய புரட்சி விளக்கின் சுடலையை சிவா சுடர்விடச் செய்தார். நாடெங்கனும் இவர்களைப் பற்றியப் பேச்சாகவே இருந்தது.

## புரட்சித் தீ!

நெல்லை ஜில்லாவில் சிதம்பரனார், சிவா இருவரும் செய்த கர்ஜனைகளின் விளைவு ஒரு புது உணர்ச்சியை உண்டாக்கிற்று. தெருவெல்லாம் சுதந்தரமுழக்கமும் வந்தேமாதர கீதமும் ஒலித்தன. அதிகார வர்க்கத்திற்கு உதவி புரியும் ஆட்களைக் கண்டால் ஆத்திரம். வெள்ளையரை நினைத்தால் வெறுப்பு. தொழிலாளர்கள் திரண்டனர். வெள்ளை முதலாளிமார்களது கொடுமையைச் சகியாதவர்கள் சிதம்பரனார் தலைமையை விரும்பினர். சலவைத் தொழிலாளர்களும், மயிர் வினைஞர்களும் வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு உதவுபவர்கள் என உணர்ந்தால் தொழில் செய்யமாட்டார்கள். சிதம்பரனாரது

சொல்லன்றி வேறு எவர் பேச்சையும் கேட்க மாட்டார்கள். இந்நாட்களில் மக்களின் உணர்ச்சியை சோதிப்பதுபோல் ஒரு நிகழ்ச்சி நடந்தது.

### சோதனை காலம்!

விபின் சந்திரபாலர் என்ற விடுதலை வீரர் சிறை மீண்ட நாளை விழாவாகக் கொண்டாடுவதென மக்கள் தீர்மானித்தனர். வெள்ளையர் ஒழிப்பு முன்னணிப்படை திரட்டிய காரணத்திற்காக விபின் சந்திரர் கொடுஞ்சிறைத்தள்ளப்பட்டார். வீரரின் விடுதலை நாளை விழாவாகக் கொண்டாடமுனைந்ததில் தவறு இருப்பதாக அதிகார வர்க்கம் அறிந்தது. முளையிலேயே கிள்ளிவிடுவதாக நினைத்து "மக்கள் கூட்டம் எங்கும் கூடாது" என தடை விதித்தது. ஆத்திரங்கொண்ட மக்களின் உணர்ச்சியை அதிகார வர்க்கத்தின் சதிகாரச் செயல்கள் அடக்க முடியவில்லை. சிதம்பரனாரையும் சிவாவையும் கூட்டங்களில் கலந்துகொள்ளக் கூடாதென வேண்டினர். அதிகார ஆணையையோ, காசாசைக்கொண்ட கம்பெனியாரின் கட்டளையையோ சிறிதும் கவனிக்கவில்லை வ. உ. சி. சர்க்காரின் தடை உத்தரவை மீறினார். கம்பெனி அவரது தீவிர அரசியல் பிரவேசத்தைத் தடுத்துவிட எண்ணியது. அதிகாரிகளது செல்லப்பிள்ளைகளாக இருந்த சில முதலாளிகள் சிதம்பரனாரது கூட்டுறவை வெட்டிவிட விரும்பினர். அரசியலாரும் கம்பெனி மூலம் சிதம்பரனார் பெரும்படையை அடக்கிவிடலாம் என நம்பினர்.

சுதேசக் கம்பெனி நிர்வாகத்தில் தலையிட்டனர். பொருளாசைக்கொண்ட பித்தர்கள் சிலர் சிதம்பர ஞரது செய்கைகளைக் கண்டித்து சர்க்கார் தாசர்க ளானதுபற்றி வ. உ. சி. கவலைக் கொள்ளவில்லை. "எண்ணறிய துன்பங்கள் எய்தியுள வெஞ்சிறையை நண்ணிடினும் நான் அஞ்சேன்" என்ற மன உறுதி கொண்ட சிதம்பரனார், மக்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு கனல்கக்கும் சொற்பொழிவுகள் நிகழ்த்த லானார்.

### எழுந்தது சங்கநாதம்!

அதிகார வர்க்கம் அஞ்சி நடுங்கும் அளவு இரு சிங்கங்களும் கர்ஜனை புரிந்தன. நாள் தவறாமல் நெல்லை வட்டத்தில் சட்டத்தின் ஊழலையும் வெள்ளையர் வெறியையும் கண்டித்துப் பேசிய பேச் சுக்கள் பல. சர்க்கார் கவனத்திற்குரியதாக இருந்த-பிரிட்டிஷ் சிங்கத்தின் பிடரி சிலிர்க்கச்செய்த-சொற் பொழிவைச் செவிமடுப்போம். அரசியல் தொண்டில் இரட்டையர்களான சிதம்பரனாரும், சுப்பிரமணிய சிவாவும் செய்த வீரகர்ஜனை என சர்க்கார் அதிகாரி களது சுருக்கெழுத்தாளர் குறிப்புப் புத்தகம் உணர்த்துகிறது. அவர்களது உரைகளில் உயிராக இருந்தவை :

"பெரியோர்களே !......நாம் பலநாட்களாகக் கூடிவருகிறோம். அதிலே பல நன்மைகள் விளைந் துள்ளன. பலதரப்பட்ட விஷயங்களைப்பற்றி ஆராய

வசதி ஏற்பட்டிருக்கிறது. நாட்டின் பல பாகங்களிலும் என்னென்ன நடைபெறுகின்றன என்பதை எளிதில் உணருகிறோம். நாட்டில் நடைபெறும் வேலை நிறுத்தங்களுக்குக் காரணம் நாங்கள்தான் என சர்க்கார் சட்டம் கூறுகிறது. இந்துக்களாகிய நாம் முகமதிய சகோதரர்களோடு ஒன்றுபட்டு சுயராஜ்யத்தை அடைவதுபற்றி யோசிப்பதில் என்ன தடை இருக்கிறது. ஊழல்கள் நிறம்பிய சர்க்காரின் செயலைக் கண்டிக்க வரி செலுத்தும் மக்களாகிய உங்களுக்கு இல்லையாம். நமக்குத் தொந்தரவு கொடுக்க சர்க்கார் போலீஸ் சகோதரர்களுக்குக் கடற்கரையில் கவாத்துப்பயிற்சி அளிக்கப்படுவதாக அறிகிறோம். நாம் எதற்கும் அஞ்சோம். 'அஞ்சவருவதும் ஒன்றுமில்லை; அஞ்சப்போவதுமில்லை' என்ற வீரர் வழி வந்த நாம் பஞ்சை சர்க்காரின் மூடச் செயலை எண்ணி நகைப்போம். இந்திய சகோதரர்களைக் கொண்டு இந்திய விடுதலை விரும்பிகளை அடித்துக் கொள்ள பரங்கியர் துணிந்துள்ளனர். இந்த அநீதி எங்கும் இல்லை. போலீஸ் படையினரது செயல் நம்மை கௌரவப்படுத்தவேச் செய்கிறது. போலீஸ் சகோதரர்களைக்கொண்டு தொந்தரவு செய்யும் அரசாங்கத்தைப் பழிக்குப்பழி வாங்குவதில் தவறு என்ன? ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடர்ச்சியாகச் செய்யுங்கள் என்று நான் கூறுவது தவறு? சகோதர க்ஷவரத் தொழிலாளர்களும், சலவைத் தொழிலாளர்களும் வேலை நிறுத்தம் செய்யும் அளவு அதிகாரவெறி தாண்டவமாடுகிறது.

பலவழிகளிலும் கசக்கிப் பிழியப்பட்ட தொழிலாளி கள் மனம் பொறுக்காமல் வேலை நிறுத்தம் செய் துள்ளனர். இந்தியா பூருவும் வேலை நிறுத்தப் போராட்ட சங்கொலி கேட்கிறது. அகில இந்திய ஒன்றுபட்ட ஐக்கிய உணர்ச்சியை அடக்க ஆங்கி லேயர்களால் முடியாது. நம்மிடையே வேற்றுமை களைக் கிளப்பி ஒன்றுபட்ட சக்தியை உடைப்பர்.

போலீஸ் குண்டாந்தடியும், ரிவால்வாரும் சட்ட முகமூடி தாங்கிவரும். அஞ்சா நெஞ்சமும் மன உறுதியும் நேர்மைக்குப் போராடும் பண்பும் நிறைந்த தமிழர் நாம். நேற்று ஒரு நிகழ்ச்சி கண்டேன். கட்டாயமாக கைக்கூலி பெறும் கசடர்கள் சிலர் வேலை நிறுத்தம் செய்த ஏழைத்தொழிலாளர்கள் முன்பு துப்பாக்கிக்காட்டி ஆலைக்கு அழைத்துச் சென்றனர். இந்த அநீதி அமெரிக்காவில் நடை பெறுமா? ஐரோப்பாவின் எந்த இடத்திலாவது இம்மாதிரியான கொடுமை இருக்கமுடியுமா?. ஐந்தாம் படை வேலை செய்துவரும் இந்திய பண மூட்டைகளின் வாழ்வு இன்னும் எவ்வளவு நாளைக்கு? ஏழை அழுத கண்ணீர் கூறிய வாளை ஒக்கும் என் பதை மறந்தனர் போலும்!......சகோதரர்களே! ஐரோப்பியர் நம்மை அடக்க மூலை முடுக்கெல்லாம் தேடி குற்றம் கண்டுபிடிக்க முனைந்துள்ளனர். சூழ்ச்சிக்கார சில உத்தியோகஸ்தர்கள் தங்கள் நல் வாழ்விற்காகப் பொய்யும், புளுகும் நிறைந்த கட்டுக்

கதைகளைக் கூறி அதிகாரவர்க்கத்தின் உணர்ச்சியை வலுப்படுத்துகின்றனர். இந்தச் சதிகார வர்க்கத்திற்குத் தான் நம் முதல்வேட்டு. நம்மிடையே ஒழிவு மறைவு இல்லை. சர்க்கார் நினைக்கும் அளவு சதிகள் செய்யவில்லை; செய்யவேண்டிய அவசியமில்லை. தாய் நாட்டு விடுதலைப்போர் தொடங்க சதி செய்ய வேண்டுமா? உங்கள் மூக்கைத்தொட உரிமை வேறொருவரிடம் பெறவேண்டுமா? அல்லது சதி தான் செய்யவேண்டுமா? நம்மிடம் உண்மை உலவும் பொழுது நாம் பயப்படவேண்டாம். சர்க்காரிடமாவது இரகசிய திட்டம், ரகசிய போலீஸ் என்ற சாதனங்கள் இருக்கின்றன. பொட்ட வெளியில் வெட்ட வெளிச்சமாகக்கூடி பட்ட கஷ்டங்களைக் கூறுகிறோம். எக்காரியத்தையும் சட்ட வரம்போடு தான் செய்கிறோம். ஏகாதிபத்திய ஆதிக்க வெறி நிரம்பிய வெள்ளையன் ரத்தத்தில் ஊறியது ஆணவப் பண்பு. அவனது முதலுக்கு ஆபத்தாக விளையுமே சுதேசியப்பற்று என அஞ்சுகிறான்! சொந்த நாட்டில் சுதேசியம் தாழ்ந்துள்ளபோது பறந்து வந்த பரங்கி பணம் திரட்டுவதா? வேலை நிறுத்தம் கௌரவமான முறையில்தான் நடைபெறுகிறது.........என்பவர் தொழிலாளர்களைக் கட்டாயப்படுத்தி இழுத்துச் சென்றார். அவரின் அடாச்செயலை அங்கிருந்தவர் கண்டித்தனர். இது தவறாக ஆளவந்தார் நினைக்கின்றனர். அமைதிக்குப் பங்கம் விளைவிப்பவர்கள் அதிகாரிகள் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன.

ஏகாதிபத்தியத்திற்கு இக்கூட்டத்தில் எச்சரிக்கை ஒன்று கூற விரும்புகிறேன். அன்பு நடவடிக்கைகளால் ஆதரவு பெறலாமே ஒழிய பயமுறுத்தல்களினுல் பயன்பெற முடியாது......சகோதரர்களே! வந்தேமாதர வித்தை வளரச் செய்தவர் விபின் சந்திரபாலர். சுதந்திரக்கனலை எழுப்ப ரத்தத்தைச் சிந்தினுர். வெள்ளை வெறியர் சிறையில் தள்ளிற்று. அவர் அண்மையில் விடுதலையாகிறுர். அவர் சிறை செல்ல வேண்டிய காரணத்தைக் கேளுங்கள். திமிர் பிடித்த ஆங்கிலேயருக்கு அடங்கி நடக்க மறுத்தார். அதற்காக 6 மாத கடினகாவல். ஈவு இரக்கமற்ற ஆங்கிலேய ஆட்சியாளர் ஒழியும் வரை போராடுவேன் என வீரம் பாடியவர் விபின் சந்திரபாலர். நாட்டில் உணர்ச்சி அலையைப் பெருக்கிய அவரது "வந்தேமாதரம்" பத்திரிகைப் பறிமுதல் செய்யப்பட்டது. அடிமையில் மோகம் கொண்டவர்கள் இந்தியர்கள் என்ற நினைப்புபோலும். வெள்ளையர் பீரங்கி முன்பு மார்பைக் காட்டிய தோழர் சந்திர பால் அவர்கள் விடுதலை விழாவைச் சிறப்பான முறையில் நடத்துவோம். வீரரின் பண்பைப் பெற அந்நாளைப் பயன் படுத்துவோம். ஆயிரக்கணக்காகக் கூடுவோம். ஊர்வலம் வந்து மாலை கடற்கரையில் கூடுவோம். ஒவ்வொருவரும் அவரவர் திறமைக்குத் தக்கப்படி பேச வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நகரத்தை விளக்கேற்றுவோம். சுதந்திரச் சிங்கம் சிறையினின்று மீளும் அந்நாளில் அடிமை விலங்கை அறுத்து சுதந்திரக்கொடி ஏற்றி

சோகம் தவிற்போம். எல்லோரும் திரண்டுவாருங் கள். இறந்தால் எல்லோரும் ஒன்றுகவே உயிர்விடு வோம். எங்களை முதலாகப் பலியிட்டு எங்கள் சவத் தின்மேல் ஏறி உங்களைச் சுட்டுக் கொள்ளட்டும். வீர சுதந்திரம் பெற இந்த உயிர் பெரிதல்ல. பொது மக்களின் விருப்பத்திற்குமாருக எதுவும் செய்யமாட் டோம். போலீஸ் படைகள் நம்மை ஒன்றும் செய்ய முடியாது. நம்மைச் சுற்றி போலீஸ் பாரா வேண்டு மானுல் இருக்கலாம்.

அதனுல் நமக்குத்தான் கௌரவம். மகிழ்ச்சி யுடன் தொந்தரவுகளை வரவேற்போம். அன்று சுதேசி மருந்துக்கடை ஒன்றைத் திறப்போம். மக்களின் நன்மைக்காக ஆயூர் வேத மருந்துச்சாலை கள் போல் பல சுதேசிய பொருள்களை விற்பனை யாக்கத் தொடங்குவோம். 'உயிர் வாழ வேண்டி ஒருபோதும் வெளியார் பொருளை விரும்பேன்' என சபதம் செய்வோம். கள்ளமில்லா ஆறு காளை களைப் பொறுக்கி அவர்களுக்கு நல்லபயிற்சி அளித் துப் பாமர மக்களிடம் போதனைபுரிய அனுப்பு வோம். தூத்துக்குடியை தீரர் முகாமாக்குவோம். பொதுக்கூட்டங்களைத் தடுத்தால் பெருமை அடை வோம். நமது கடமைகளைச் செய்வதில் சளைக்க வேண்டாம். அவசியம் நேர்ந்தால் நெல்லையிலேயே நமது பாசறை கூட்டுவோம். மதுரை ஆலயில் இரு நூற்றைம்பதற்கு அதிகமாக வேலைநிறுத்தம் செய் துள்ளனர். நாங்கள் அங்கு சென்று சொற்பொழிவு

செய்யாமலிருக்க ஆலை முதலாளிகள் அரசாங்கத்தார் துணையோடு தடைவிதித்துள்ளனர். நம்மைக் கண்டு நாட்டில் குடிஏறிய ஐரோப்பியர்கள் ஏன் அஞ்ச வேண்டும்? நாம் நம் நாட்டில் கூட்டம் போடுவதில் தவறு என்ன? நாம் ஐரோப்பாச் சென்று கூட்டம் போடவில்லை. துப்பாக்கிகளைக் காட்டிப்பயமுறுத்து வார்கள். அஞ்சாமல் கூடுவோம். அவசியம் ஏற்பட்டால் வீடுவீடாகச் சென்று கூடுவோம். அரசியல் அதிகாரிகள் வீட்டினுள் நுழையா வண்ணம் தடுப்போம். தடை உத்தரவு வருமுன் தகுந்தவழி செய்வோம். பஞ்சாப் பயங்கரப்படு கொலைசெய்த பரங்கியர்களைப் பழிக்குப்பழி செய்வோம். ரணகளத்திலே கத்தி யேந்தி சண்டை செய்ய சக்தி இல்லை. சாத்வீக முறையில் நம் போர் தொடங்கட்டும். கர்ணங்களும், கிராம முனிசிபுகளும் ராஜினாமாச் செய்ய தூண்டுவோம். அப்பொது அதிகார வர்க்கம் என்ன செய்யும்? நாவிதத்தொழர்கள் தொழில் செய்ய மறுத்தால் அன்னிய ஆட்சியாளர் என்ன செய்யமுடியும்? ஏகாதிபத்திய சுமைதாங்கிகளான வக்கில்கள் இருவர் பாதி க்ஷவரத்தோடு விடப்பட்டதை மற்ற வெறியர்களும் அறியட்டும். நாவிதர்கள் அடிமைகளா? அரசாங்கத்தார் நாவிதர்களைத் தங்கள் நாட்டிலிருந்து இறக்குமதி செய்வார்களா? ஐரோப்பியப் பண்பாடே அடிமையை வளர்ப்பது. அரசாங்கத்தின் கடமை நாட்டை வளப்படுத்துவதே. இந்த வெள்ளைக்காரர் எண்ணம் சுரண்டல் ஒன்றுதான்.

ஒற்றுமையாய் நாம் இருந்தால் நம்மை எவரும் அசைக்க முடியாது. கோடிக்கணக்கான பவுன்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். கலைகள் பறி போய் உள்ளன. அதற்குப் பழிவாங்க நாம் அவர்களை வழிப்பறி செய்து விரட்டி அடிப்போம். நீங்கள் ஐரோப்பியர்களுக்குப் பிறந்தவர்கள் அல்ல. நீங்கள் ஐரோப்பியர் களது நண்பர்களும் அல்ல. எவ்வித சிறு உதவியையும் அவர்களுக்குச் செய்யக் கூடாது. மண்ணிலே பிறந்தோம். இயற்கைச் செழிப்பில் வளர்ந்தோம். மண்ணிலே மாள்வோம். ஆகையால் நம் நாட்டின் நலங்குறித்து, சமூகத்தின் வாழ்வுக்குறித்து சளைக்காமல் உழைப்போம். பணத்திற்கு ஆசைப்பட்டு உங்கள் பண்பை இழக்காதீர்கள். சுதேசிக்கு மூச்சளியுங்கள். தொழிலாளர்களுக்கு ஆதரவு அளியுங்கள். அவர்களைக் காப்பது உங்கள் கடமை ஆலைகளுக்குக் கூலிகளை அனுப்பித்து உங்கள் சுயநலத்திற்கு உழைக்கவேண்டாம். இருந்தால் புசிப்போம். இல்லையேல் உயிர்விடுவோம். தன்மானத்தைக்காக்க முயலுங்கள். வெற்றிப் பாட்டையில் வீர நடைப்போடுங்கள். ஆயிரக்கணக்கான மக்கள் துணை நிற்பர். தியாகிகளது ஆசி நம்பக்கம் இருக்கிறது. அஞ்சவேண்டாம். ஜெய வந்தே மாதரம்!

**பேச்சின் உச்சம்!**

பெரியோர்களே!......பல கூட்டங்களில் பேசினேன். இன்று சர்க்கார் கண்ணிற்கும் காதிற்கும்

விளக்கெண்ணெய் ஊற்றிக்கொண்டு வந்துள்ளார் கள். நமது மாபெரும் கூட்டத்தைக்கண்டு கலங்கி விட்டனர் அதிகாரிகள். வீட்டில் ஒருவரும் இல்லா மல் பூட்டிவிட்டீர்கள் போலும்! அதோ......அங்கு தெரியும் போலீஸ் தொப்பிகளது பூச்சாண்டிகளுக் குப் பயப்படாதீர்கள். ஊர்வலம் வந்தபோது சில சிகப்புத் தொப்பிகள் திருவிளையாடல்கள் புரிந்தன வாம். தாங்கள் யார் என்பதை அவர்கள் மறந்தனர் போலும்! நாம் ஒன்று சேர்ந்தால் வெள்ளையர் வெளியேற இப்பாதம் தாங்கிகளும் பணிந்து வருவர். காசிற்குச் சிலர் செய்யும் கொடுமைகள் பல உண்டு. பயப்படாதீர்கள்.........சகோதரர்களே, என் பேச் சின் நோக்கம் என்ன என்பதையும், இம்மாதிரியான கூட்டங்கள் ஏன் என்பதைப்பற்றியும், உங்களுடன் பல நாள் தங்கவேண்டியதின் அவசியத்தைப் பல தடவை கூறி உள்ளேன். இருந்தும் சில அதிகாரி கள் சுயநலத்திற்கு உழைப்பதாகச் சொல்லுகிறார் களாம். ஆம்! சுயநலம்தான். சுதந்திர உரிமை— நம் நாட்டை நாம் ஆள—நினைப்பது சுயநலம்தான்! இங்கிலாந்தை நாம் ஆள நினைக்கவில்லை. தேவையும் இல்லை. பரந்த இப்பாரத பூமியே போதும். மேலை நாட்டாரும் தலை வணங்கும் தாய்த் தமிழ் நாடு ஒன்றே போதும். சுதந்திரம் நமது குறிக்கோள், எப்பாடுபட்டேனும் நாம் அதை அடைந்தே தீரு வோம். சுதந்திரமின்றி நாம் உயிர் வாழக்கூடாது என உறுதி கொள்வோம். அடிமை வாழ்வை உடைப்போம். மரணத்தைக் கண்டு பயப்படுபவன்

மனிதனன்று; கோழை! சாவிற்கு ஏன் அஞ்சவேண் டும்? அடிமையைவிட பயங்கரமானதா இறத்தல்? அழிவற்றது ஆத்மா. மூச்சழிந்தாலும் மற்றொரு சரீரத்தில் ஆத்மா வளரத்தான் போகிறது. தருமம் செய்பவன்தான் மோட்சத்தை அடைவான் என்ற மூடக் கொள்கைகளைத் திருத்துவோம். எவனொரு வன் பொதுநலத்திற்காக, நாட்டின் நன்மைக்காக, தேச விடுதலைக்காக உயிர் துறக்கிறானோ அவன் ஒரு வன்தான் மோட்ச லோகத்தை அடைவான். இது நாள் வரை நாம் அடிமை என்றும் சிறையில் பூட்டப் பட்டிருந்தோம். சட்டம் என்ற விலங்கு கட்டப் பட்டிருந்தது. ஒன்றுபட்ட ஐக்ய சக்தியால் அதைத் தகர்ப்போம். பூர்ண சுதந்திரம் கிடைக்கும் வரை போராடுவோம்.

உங்களை ஒன்று வேண்டுகிறேன்; "நமது லட்சி யம் பூர்ண சுதந்திரம். அதற்காக எவ்வித இன்னல் களை எல்லாம் ஏற்போம். உடலாலும் மனத்தாலும் வேறு கொளோம். உரிமைப் போர்ப்படையின் முரசு ஒலித்தால் அணிவகுப்போம். களத்தில் வெற்றி காணுவிடில் உயிர் விடுவோம்" என்பது தான் எங்கள் எளிய வேண்டுகோள். விடுதலைப் பெற்ற இந்தியா தான் நம் தாய் நாடு. இங்கிலாந்திற் கும் இந்தியாவுக்கும் ஏற்பட்டுள்ள தொடர்பை அறுப்போம். அன்னியன் கப்பலேறும் அந்த நாளே சுவித நாள். வெள்ளையன் கொடியை வெறுப்போம். சுதந்திரத்தாயின் மணிக்கொடி நாட்டுவோம். இம

யத்தின் தலையில் அன்னை கொடி அழகாகப் பறக்க வேண்டும். நீளக்கடலில் பாரதக் கொடி பறக்கும் கப்பல்களைக் கட்டுவோம். மாற்றான் கொள்ளை யடிக்க வராமல் தடுப்போம். நம் புண்ணிய பூமி இனி அன்னியனுக்கு இடம் தராத வகையில் பணி செய்வோம். ஜெய வந்தேமாதரம்!

"அபாயகரமான ஆள்!"

"விழாவில் கலந்து கொண்டதும், ஏகாதிபத்திய எதிர்ப்புரை ஆற்றினதும் தவறு" என்ற சட்டத் துணைக்கொண்டு அதிகாரவர்க்கம், சிதம்பரனாரை சிறைச் செய்ய முடிவு செய்தது. தூத்துக்குடியில் தங்கள் ஆத்திரத்தைத் தணிக்க முடியாதென அறிந்த அதிகாரவர்க்கம், நெல்லைக்குத் தனியாக அழைத்தது. சிதம்பரனாரது வீட்டைச் சோதனை செய்து சில கடிதங்களைக் கைப்பற்றியது. புரட்சி இயக்கத்தை வளர்த்ததோடு ஏகாதிபத்திய எதிர்ப்பாளருக்குத் துணைசெய்தார் என குற்றம் காட்டி கைது செய்தனர். "இந்தியாவில் புரட்சியை எழுப்ப இந்தியர்களுக்கு சட்ட ரீதியான உரிமை இல்லை. ஏனெனில் பிரிட்டிஷாருக்கு உள்ள வாக்குரிமை இந்தியர்களுக்கு வழங்கப்படவில்லை. அடிமை இந்தியன் கூட்டம் போடக்கூட அநுமதி கிடையாது. அன்னியப் பொருள்களை அகற்ற நினைக்கவும் முடியாது. ஆகையால் இந்தப் பயங்கர வாதியை 124 A பிரிவின்கீழ் கைது செய்யலாம்" என்று துணிவோடு கூறினான் செஷன்ஸ் நீதிபதி பின்ஹே என்ற வெள்ளை

வெறியன். உள்ளபடியே அவன் கூறியபடி அக் காலத்தில் வீரர் வ. உ. சி. ஒரு 'அபாயகரமான பேர்வழி' யாகத்தான் விளங்கினர்!

**கோர்ட்டில் கர்ஜனை!**

வெள்ளை நீதிபதியின் வெறி உரைகளைக்கண்டு மனம் கசிந்தார் மக்கள் மட்டுமே! சிதம்பரனர் தாயின் கால்விலங்கைத் தகர்க்கச் செல்வதாகப் பூரிப் படைந்தார். வெறியலின் முடிவுரைக்குப் பின் சிதம்பரனர் செப்பியது :—'என் தாய்நாட்டு பூரண விடுதலைக்கு என் கடைசிமூச்சுவரை உழைப்பதுவே என் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டுள் ளேன். கடுஞ் சிறை தள்ளினும் கவலை கொள்ளேன். நான் நான்கு வருடங்களாக நாட்டின் மூலைமுடுக் கெல்லாம் சுற்றிவருகிறேன். சுதந்திர விழிப்பு மக்க ளிடையே எத்தன்மையில் இருக்கிறது என்பதை எளிதில் உணர்ந்தவன் நான். ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்ச்சியும் கொந்தளிப்புடன் இருப்பதை விரை வில் காண்பீர்கள்.

இம்மாதிரி நான் பேசி மக்களிடம் கிளர்ச்சி செய்வது வேறு ஒருவரின் தூண்டுதல் என கூறுவது பொய்யர்களின் தீயுரை! சுத்த ரத்தம் ஓடும் ஒவ்வொருவனும் சுதந்திர நாதத்தை எழுப்பாம லிரான். இது வரலாறு கண்ட உண்மை!

9—3—1908-ல் நெல்லையில் பேசிய பேச்சில் புரட்சி வாடை வீசுவதாகவும், அதனல் நாட்டில்

அமைதியின்மையும், கொந்தளிப்பும் தாண்டவ மாடுவதாகவும் குறிப்பிடுகிறது அதிகார வர்க்கம்- சிறுபிள்ளைத்தன வாதம் இது. நோய்வாய்ப்பட்டவ னுக்கு அவன் படும் துன்பங்களை பிறர் சொல்லி அறிவதுபோல் அல்லவா இருக்கிறது. கொடுமை அனுபவிக்கும் மக்களது உணர்ச்சியின் விளைவு.. என் பேச்சு அவர்களுக்குத் துணையாக இருக்கலாம்.. ஆனால் அதிகார வர்க்கத்தின் ஆணவமும், அடிமை யின் வெறுப்பும்தான் இத்தகைய குழப்பங்களுக்கெல் லாம் காரணம். ரகசியங்களை எல்லாம் ஆராய்ந் தறியும் நிபுணர் கூட்டம் இந்தச் சாதாரண உண் மையை உணராதது ஆச்சரியம்; அவமானமும்கூட!

வெள்ளை ஏகாதிபத்தியம் இந்தியாவில் குடிசை (கம்பெனி) கொண்ட காலத்திலிருந்தே வெறுப்பும், ஆத்திரமும், பகைமையும் கொண்டிருந்தனர். அதி லும் நேரிடையான போரில் வீரர் வழிவந்த எங்களை வென்று எங்கள் தாய்நாட்டை அடிமைப்படுத்தி னாலும் பரவாயில்லை. வஞ்சகமும், சூதும், ஏமாற் றும், பொய்மையும், சுதேச மண் பொம்மைகளை (அரசர்களை) ஆட்டியும், பொய் கையெழுத்திட்டும், மதப்பிரிவினை செய்தும் வாது அறியா வெள்ளை மனத்தவர்களாகிய எங்கள் மூதாதைகளை நயவஞ்சக மாக நாட்டைக் கைப்பற்றிவிட்டார்கள். அப் பொழுதே எங்கள் ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்ச் சியைக் காட்டினோம்.

1859-ல் நடைபெற்ற முதல் சுதந்திரப் போரை மக்களிடையே, போர் வீரர்களுள் மதப் பிரிவினையால் எழுந்த குழப்பம் எனக்கூறி மயக்கினுர்கள். இருந் தாலும் அன்று ஆரம்பமான சுதந்திர ஜ்வாலை இன்று வரை நீறுபூத்த நெருப்பாக இருந்துவருகிறது. என்னைப் போன்ருரை சிறையில் தள்ளினுல் நெருப்பு அணைந்துவிடும் என நினைக்கின்றனர் வெள்ளைக்காரர் கள். அது தவறு. உள்ளத்தின் அடிதளத்திலிருந்து குமுறிவரும் எழுச்சி மூச்சு எப்பொழுதாவது சுடர் விட்டெரியத்தான் செய்யும்.

1859 முதல், சுதந்திரப் போரின் முடிவில் விக்டோரியா ராணி சாசனத்தைக் காட்டி, அன் றைய எங்கள் சுதந்திர வீரர்களை மயக்கினுர். பின் வந்த வைசிராய்கள் ஆசைவார்த்தைக் காட்டி அதி கார வர்க்கத்தின் வேரை ஆழப் பதித்தார்களே தவிர அடிமையைப் போக்க மருந்திடவில்லை. வேற்று நாட்டான் என் தாய்நாட்டானிடம் துப்பாக்கி வைத் திருக்கக் கூடாது எனக் கூற என்ன உரிமை அவ னுக்கு இருக்கிறது? இந்தியனை எல்லா வகையிலும் தாழ்ந்தவனுக்கியது இந்த அரசாங்கம். குடியேறிய பிற நாட்டானுக்கு ஒரு சட்டமும், பிறப்புரிமை படைத்த பாரத மக்களுக்கு ஒரு சட்டமும் கொண்டு ஆட்சி நடத்தும் அதிகார வர்க்கம் என்று ஒழியும் என என்போன்ருர் கோஷிப்பதில் தவறு உண்டா?

இருபெரு இனங்களிடையே பிரிவினை எ.ண் ணத்தை எழுப்பியதோடு, சுதந்திரக் கிளர்ச்சிக்

குழைக்கும் உத்தமர்களை வெஞ்சிறையில் தள்ளு வதும் அயோக்யத்தனமல்லவா! குறும்புத்தனமான சட்டமும், விபரீதமான உத்திரவுகளையும் இந்தியன் பேரில் சாட்டுவதை யார்தான் பொறுப்பர்? இதனால் கிரிமினல் குற்றங்கள் அன்றோ அதிகமாகி உள்ளன. இந்த அரசாங்கத்தின் மனிதத் தன்மையற்ற, நீதி யற்ற கொடுமைகளினால் மக்கள் ஆத்திரமும் அறுவெறுப்பும், சஞ்சலமும் கொண்ட ஆட்சியிலே மாற்றம் காண துடிப்பது ஆச்சரியமன்று. உண்மைக் காக உழைக்கும் ஒவ்வொரு மனிதனும் இயற் கைக்கு மனிதத் தன்மைக்கு மாறுபட்ட எதையும் ஒழித்துவிட்டு நியாயமானதை ஏற்படுத்த விரும்பு வதுபோல்; யோக்கியமற்ற, நாணயமற்ற, இயற் கைக்கு மாறுபட்ட கொடுங்கோலாட்சி புரியும் இந்த வெள்ளையர் வெறி ஆட்சியை அடியோடு அகற்றி, அறிவுக்கும், அமைதிக்கும் அடிகோலும் அரசாட் சியை நிலைநாட்ட முன்வந்ததைக் குற்றம் கூறுவது தவறு. என்னைத் தண்டித்தால் மட்டும் இந்தச் சுதந்திரக் கிளர்ச்சி அடங்கிவிடாது. சர்க்கார் மனப்படி எதையும் செய்யட்டும்.........!

**நீதிபதியின் தீர்ப்பு:**

"சிதம்பரம் பிள்ளை ஒரு புரட்சிகரமானவர். சதி செயல்கள் செய்வதிலும் மக்களை ஒன்று திரட்டு வதிலும் முனைந்தார். அவரது ஒவ்வொரு பேச்சும் மக்கள் ரத்தத்தில் தோய்ந்து புரட்சியை எழுப்பக் கூடியவை. அவரது உடலின் உறுப்புக்கள் ஒவ்

வொன்றும் ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்ச்சி கொண்டவை" என்று நீதிபதி ஸ்தானத்தில் அமர்ந்த "பின்ஹேஹ" என்ற வெள்ளையர் கூறினர். வழக்கு 1908ம் ஆண்டு பிப்ரவரி 23—28, மார்ச் 1, 3உகளில் சிதம்பரனுர் பேசிய பேச்சுகளுக்காகப் போலீஸார் தொடுத்தனர். மக்களை ஒன்று திரட்டி சர்க்காருக்கு எதிராகச் சதி செய்ததாகவும், புரட்சிக் கும்பல் களுக்கு ஆதரவு அளித்ததாகவும் குற்றம் சாட்டி 20 வருட திவாந்திர தண்டனை, சேர்ந்தார் போல் அனுபவிக்கவேண்டும் என்று சர்க்கார் தீர்ப்பளித் தனர்.

சிறை சென்ருர்!

தாயகச் சேவை செய்ய வந்த சிதம்பரனுர் சிறைக் கொட்டம் புகவேண்டும் என்று சட்டத் துணைக்கொண்டு கட்டளையிட்டான் வெள்ளை ஏகாதி பத்திய வெறியன். அறிவும் ஆண்மையும் படைத்த அண்ணல் களவாணிக்கூடம் செல்லவேண்டும். மக் களிடம் உண்மையை உரைத்தது தவறு. ஏகாதிபத் திய சூழ்ச்சிகளை சகோதரர்களுக்குக் கூறியதால் தண்டனை. அதிகார 'கோஷாக்களுள்' நடைபெறும் சதிகளை ஜனங்களிடம் வெட்ட வெளிச்சமாக்கக் கூடாதென சட்டம் செப்பியது. சட்டஞானம் சிறம் பிய கலைஞரை சர்க்கார் கைது செய்து சிறையில் பூட்டினர். மூப்பத்தைந்தே வயதுடைய சிதம்பரனுர் தன் வயோதிகத் தாய் தந்தையரையும், இளம்

மனைவியையும், பச்சிளம் பாலகர்களையும் பிரிந்து சிறை சென்றார். வீரர் சிறைச்சாலையை நண்ணின நாளில் அவரது அருமைத் தலைவர் திலகர் பெருமானும், ஆட்சேபகரமாக எழுதிய ஒருகட்டுரைக்காக ஆறுவருடம் தீவாந்திரமும், பத்தாயிர ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுச் சிறை சென்றது ஆச்சரிய மல்லவா! குருவும் சீடரும் சிறைக்கூடம் ஒன்றாக நாடினர். தேச பிரபல பத்திரிகைகள் சர்க்காரின் செயலைக்கண்டித்தன. நாட்டில் துக்கமும் ஏக்கமும் தாண்டவமாடின. இந்திய மந்திரியாக இருந்த லார்டு மார்லி என்ற வெள்ளையர் கூட 'சிதம்பரனாரைச் சிறை செய்தது சிந்தனை அற்றவர் செய்கை' என வைஸ்ராய் லார்டு மாண்டோவுக்கு எழுதினார். ஆனால் சிதம்பரனார் சித்தம் குலையவில்லை. சிறைச்சாலையைப் பெரும் தவச்சாலையாகக் கருதினார்.

"நாட்டில் எங்குஞ் சுதந்திர வாஞ்சையை
நாட்டினாய், கனல் மூட்டினாய்
ஓட்டம் நாங்கள் எடுக்க என்றே கப்பல்
ஓட்டினாய் பொருள் ஈட்டினாய்!"

என்று வெள்ளை கலெக்டர் ஒருவன் கூறியதும் அதற்குப் பதிலாக

"பொருதெல்லாம் எங்கள் செல்வம் கொள்ளை கொண்டு
போகவோ நாங்கள் சாகவோ
அழுது கொண்டிருப்பமோ ஆண்பிள்ளைகள் நாங்கள்
அல்லாமோ உயிர் வெல்லமோ?"

எனச் சிதம்பரனுர் செப்பியதாக பாரதியார் உண்மை யறிந்துதான் பாடினுர் போலும்!

**அந்த நாளில் ஆரம்பமாயிற்று ' ஆகஸ்டு 42 '!**

சிறைபட்ட சிதம்பரனுர் செய்தியை உணர்ந்த மக்கள் ஒன்று திரண்டனர். அதிகாரிகளது செயலைக் கண்டிப்பதற்காக நகரில் கடையடைப்பும், மாணவர்கள் ஆர்பாட்டமும், தொழிலாளர்கள் வேலை நிறுத்தமும் செய்தனர். அடக்குமுறையின் விளைவு அனர்த்தமாவதை அறிந்த அதிகாரிகள் அஞ்சினர். வெள்ளையதிகாரிகளை வெட்டும் அளவு மக்களிடையே ஆத்திர உணர்ச்சி எழுந்தது. சர்க்கார் கட்டிடங்கள் தகர்ந்தன. தந்திக் கம்பிகள் அருபட்டன. மண்ணெண்ணெய்க் கட்டடங்களும், அதிகாரிகள் இருப்பிடமும் தீக்கிரையாயின. சர்ச் மிஷின் பள்ளியில் ஆர்பாட்டம். அங்கு இருந்த வெள்ளைப் பாதிரிகளை ' வந்தே மாதரம் ' சொல்லச் செய்தனர். போலீஸ் ஸ்டேஷனிலும் ஆர்பாட்டக்காரர்கள் புகுந்து சேதத்தை விளைவித்தனர். நகரில் கோரம் தாண்டவமாடிற்று. மக்களின் ஒன்றுதிரண்ட பழிவாங்கும் உணர்ச்சியைக்கண்ட பரங்கியர் அஞ்சினர். ஒரு வெள்ளையன் தன் கைத் துப்பாக்கியால் சுட்டு நால்வரைக் கொன்ருன், பலரை காயப்படுத்திஞன். குண்டுக்கிரையான பிரேதங்கள் நடுரோட்டில் நாறியற்று கிடந்தன. அதிகாரியின் ஆணவச் செயலைக்கண்ட மக்கள் கற்களால் அவ்வதிகாரியைத் தாக்க ஆரம்பித்தனர். நகரில் ' சர்வோலம் ' அறிகரித்தது. அமைதி நிலவ

காட்கள் நான்காயின. இவை அனைத்தும் தியாகி களின் தலைவர்கள்—மறத்தமிழன்—வ. உ. சி. சிறைப் பட்டதின் காரணம். இங்ஙனம் அக்காலத்திலேயே 1908-ல் 'ஆகஸ்டு '42' ஆரம்பமாய் விட்டது!

**சிறைபட்ட சிதம்பரனுர்!**

சட்டம் கொண்டு சிதம்பரனுரை மட்டம் தட்ட லாம் எனதிட்டம் போட்ட சர்க்காரின் எண்ணம் வெற்றி பெறவில்லை. சிதம்பரனுரின் சீரிய தலைமை யில் எழுந்த உணர்ச்சி உருவங்கள் கிளர்ச்சி செய்த வண்ணமாயிருந்தன. சிறைக் கூடத்தைத் தவக்கூட மாக நினைத்தச் சிதம்பரனுர், சொல்லரிய துன்பங் களை அடைந்தார். செல்வத்தின் அரவணைப்பில் துயில் கொள்ள வேண்டிய அவர் துயர வாழ்க்கை யில் கண்ணயர்ந்தார். அறுசுவை உண்டு அரசர் போல் வாழ்ந்த சிதம்பரனுர், சிறையில் சிக்கடித்த கேழ்வரகு ரொட்டியையும் குழம்பையும் கரிக் கட்டை மண்ணுங்கட்டியுடன் கலந்துண்டார். சிறை யில் ஊறுகாய் கேட்ட சீமான்களும், 'ஈஸிசேரும்' சிக்ரெட்டும் வேண்டிய தேசிய வாதிகளும் இன்று "தியாகிகள்" பட்டியலில் தலைமை வகிக்கின்றனர்; வரவேற்புப் பெறுகின்றனர்; வணங்காமுடி மந்திரி களாகி விட்டனர்! அரசியல் கைதிகளுக்கு அக்காலத் தில் எவ்வித சலுகைகளும் காட்டினதில்லை. கொலை யும், களவும் செய்த கொடுஞ் செயலாளர் வரிசை யில் சிதம்பரனுரும் சேர்க்கப்பட்டார். சிறை சென்ற செம்மல் செப்புவதைக் கேண்மின்:

" மரத்தின் பட்டையென வரையத் தக்க
உரத்த துணியில் உருப்படுத் தியதல்
கால்களில் லாத கைகளில் லாத
கால்சட்டை யொன்றும் கைசட்டை யொன்றும்
தலைக்குல் லாவெனச் சாற்றுவ தொன்றும்
தலைக்கொரு முன்குத் தந்தன கண்டேம்
மூன்றையும் அணிந்திடின், முண்டமே யாகத்
தோன்றுவ தல்லது சொரூபம் தோன்றுத்
திறந்தவை... ... ... ... ...
உடுத்தேம் அவற்றை உளங்கொடு!"

என்னே சிதம்பரனுர் தீரம்! அந்நிலையினும் அவர் அன்பு 'உளங்கொடு' அவற்றை ஏற்ருர் என்ருல் அவர் பெருமை யாரே உரைப்பார்!

## தியாக மூர்த்தி!

ஆயிரம் மைல்களுக்கப்பாலிருந்து வியாபாரம் செய்யவந்து, வேந்தர் தொழில் ஏற்ற வீணர் தாய் நாட்டில் பிறந்த, சுதந்திரம் விழைந்த-சிதம்பரனுரை சிறையில் தள்ளி சிப்பி ஏந்தச் செய்த கொடுமை இந்நாட்டில் தான் கண்டோம். சர்க்கார் செய்த கொடுஞ் செயல்களை யெல்லாம் சகித்து உவப்போடு சிறையில் வாழ்ந்த சிதம்பரத்தையும் செந்தமிழகத்தில் தான் கண்டோம். காராக்கிரகம் தள்ளிய சர்க்காரின் 'கருணை' இத்துடன் மட்டுமில்லை; அன்பர் வெளியேற வண்ணமிருக்க (?) காலுக்குக் 'கரும் பொற் கழலணி' (சங்கிலி) பூட்டினராம்! அந்தோ,

அது பற்றி அன்பர் சிதம்பரனுரே கூறுகிறார்: "தந்தான் வலது கால் தண்டைகள், அரும் பொன் காலிடல் அபசாரமாதலால் இரும்பினை அணியு மென் றீந் ததைப் போன்றே" என்று! விசாரம் தோய்ந் துள்ளதா வாசகத்தில்? விருப்புடன் ஏற்றார்! வீரர் வழிவந்த வள்ளலல்லவா! சாப்பிடச் சட்டியும் கலய மும் வந்தது கண்டு சிதம்பரனார் நண்பர் கோவென்ற லறினார் என்றால் சிதம்பரனார் நிலையைச்சற்று எண் ணிப் பாருங்கள்! துயர்சிறையில் உயிர் வாதைப் பட்ட வ. உ. சி அன்றோ தியாக மூர்த்தி! பட்டத் திற்கோ, பணத்திற்கோ கொட்டம் புகவில்லை. நாட்டு விடுதலையில் நாட்டம் கொண்டு நண்ணினார். நல்வாழ்வில் சுகபோகத்தில் திளைத் திருந்த சிதம்பர னார் பாளையங்கோட்டைக் கொலைஞர் கூடத்தில் சிலகாலம் தங்கிப் பின் கோவைக்குக் கொண்டு போகப் பட்டார்!

**பிரியாவிடை பெற்றார்!**

சிதம்பரனார் சிறை மாற்றுப்படல மறிந்த நேயர் கள் பலர் வ. உ. சி. வரவுக்குக் காத்திருந்தனர். அன்பு கண்ணீர் சுரக்க அதரம் துடிக்க தன்னிலை மறந்து தளிர் போல் வாடி நின்ற மக்களுக்கு சிதம்பரனார், "விரைவினில் திரும்புவேன்; விடாதீர் சுதேசியம்; தரைமிசை எதுவும் தருவததுவே" என்று தாரக மந்திரத்தை மட்டும் கூறி பிரியாவிடைப் பெற்றே கினார்.

கோவைக் கூடத்திலே!

சிறை வாழ்க்கையின் கொடுமைகளைச் சிதம்பரனார் கோவையில் தான் கண்டார். நரகம் என்ற பெயருக் கேற்ற வண்ணம் இருந்த தாம் அக்காராக்கிரகம். சமூகவிரோதிகள் உறைவிடமான சிறையில் மக்கள் தலைவர் சிதம்பரனார் அவதியுற்றார். பிறர் பொருளைக் கொள்ளையிடும் கசடர்கள் மத்தியில் விடுதலை வேட்கையை எழுப்பிய ஏந்தல் இருக்க நேரிட்டது. சிதம்பரனார் சீரழிந்த உணவினை உண்டு உடல் நைந்திருந்த நிலைமையிலும் கடுமையான வேலைகளைச் செய்யக் கட்டளை யிட்டனர். அதிகார வெறியாளர்கள் கேப்பை ரொட்டியையும் கூழம்பையும் உண்டு சணல் கிழிக்கும் யந்திரத்தைச் சுற்றப் பணித்திருந்தனர். எழுது கோல் ஏந்திய கரம் இயந்திரம் இழுத்திற்று. மென்மைத் தோல் உதிர்ந்து ரத்தம் கசிந்து கண்ணீர் உதிர்த்து கஷ்டப்பட்டார்.

செக்கிழுத்தார் சிதம்பரனார்!

ஆம்! வெள்ளை ஏகாதிபத்தியத்திற்குச் சாவு மணி யடிக்க வேண்டிய கை அன்று செக்கிழுத்தது. கொடும்பாவி சிறையதிகாரிகள் சிதம்பரனாரை செக்கிழுக்கும் தன்மையை வெள்ளையதிகாரிகள் அளித்திருந்தனர். சீர்திருத்தம் வேண்டிய செம்மல் சன் யாட்சன் சிறையிருந்தகாலை சட்டிகூட ஏந்தவில்லை! ஆனால் பாழும் பரங்கியர் ஆட்சியில் பண்பட்ட தமிழன் சிறுநீர் சட்டி ஏந்தினான்; செக்கிழுத்தான்!

கடுங்கனலில் ஓர் நாள் செக்கிழுத்து சிதம்பரம் சிரம் சுற்றிக் களைத்து மூர்ச்சித்து மண்ணில் விழுந்தார். அந்தோ! கொடும்பாவி பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வெறியர்கள் நெஞ்சம் கல் போலும்! எவ்வித இடுக்கண்ணிற்கும் சிதம்பரனூர் சித்தம் சிதையவில்லை. அன்னை விலங்கு அருந்தொழிய ஆருயிரையும் இழக்க முன் வந்த பெரியார் சிறையில்பட்ட துன்பம் இன்னும் எத்தனையோ! சிலுவையில் அறைந்த காலையும் புண் முறுவலோடும், கருணை ஒளிர் கண்களோடும் காட்சியளித்த லட்சியவாதி ஏசுபிரான்போன்று மாசுடையார் கொடுமைகளை எல்லாம் ஏற்றூர்!

## தவக்கூட மாக்கினூர்!

சிலருக்கு சிறைதான் ஓய்விடம். அறிஞர்கள் சிலர் சிறையில் நூல்கள் பல யாத்துள்ளனர். பெரு நூல்கள் பல படிக்க ஏற்ற இடமாக இருந்தது சிறைக் கூடமே! 'சிறைப் பறவைகள்' என சொல்லப்படும் காந்தியடிகளாரும், பண்டிதர் நேரும்; பெரியார் ஈ. வே. ரா. வும் சிறைக்கூடத்தில் தான் தங்கள் அறிவைக் கூருக்கினர். வெளியில் ஓய்வின்றி உழைக்கும் உத்தமர்களுக்கு அரசியலார் கருணைகொண்டு அடிக்கடி சிறையிட்டு ஓய்வளிப்பார்கள். உழைத்துழைத்து உருமாறிய பெருமக்களுக்கு சிறைக்கூடம் தவக்கூடமானதில் ஆச்சரியமில்லை அல்லவா! மேற்கண்ட கரும வீரர்களுக்குக் கீதையும், சுயசரிதையும், சீர்திருத்த சிந்தனையும் ஓய்வு விருந்தாக இருந்தது. ஆனல் தீரர் சிதம்பரனூர் செக்கிழுத்து, சணல்

யந்திரம் முடுக்கி, ஓய்வு என்ற பொருள் வாழ்வில் கிடைத்த காலத்தில் உலக அறிவாளர் நூல்களைப் படிப்பார். மனமகிழ்ச்சி மறந்த மறத் தமிழன் உணர்வு கொள்ள உதவியது ஒரு சில நூல்களே! உலகம் போற்றும் ஆங்கில அறிஞன் ஜேம்ஸ் ஆலன் தீட்டிய "As a man thinketh" (மனம் போல் வாழ்வு) என்ற நூலை தாய் மொழியில் எழுதினர். மக்கள் தொண்டில் மனம் செலுத்திய மாண்புடையார் எங்கு செல்லினும் நல்ல தொண்டில் நாட்டம் செலுத்தாமலிரார் என்பதற்கோர் எடுத்துக்காட்டு இஃது!

### கற்பாளிடரும் ஆனார்!

அறிவின் சிகரம் அச்சுத் தொழிலாளி ஆனார். செக்கு இழுத்து தோட்டி வேலை செய்து துவண்ட கரம் அச்செழுத்துக்களைப் பொருக்கி அறிவுரைகளை அழகாக அடுக்கி அகிலம் அறியச் செய்தது. எண்ணச் சுழலை எழில் பேச்சில் மக்களைச் சுழலவைத்த சிதம்பரனார் ஏட்டில் பதியும் அச்சுக் கலைத் தொழிலிலும் தீரரானார். நச்சுத் தொழில் எனச் செப்பும் அச்சுத் தொழிலை அன்பர் இச்சையுடன் ஏற்று ஆற்றினர்.

### விடுதலைப் பெற்றார் வீரர்!

சேவையே மூச்சாக வாழ்ந்து சிறைத் துன்பம் எய்திய சிதம்பரனார் 1912-ம் ஆண்டு டிசம்பர் திங்களில் விடுதலையடைந்தார். விலங்கொடிக்கச்

'சிறை சென்ற வீரர், உடல் நலிந்தாலும் உள்ளம் வலுவுடன் வந்தார். பாரத அன்னையின் வீரபுத்திரர் விடுதலைப் பெற்றச் செய்தி நாட்டில் பரவியது. மக்கள் உயிர் வாழ்கைக்குத் துயர்பட்ட தீரரை நேரிய முறையில் தமிழகம் அன்று வரவேற்கவில்லை என்பது உண்மை! அதிகார வர்க்கம் அறியாமல் புறமிருந்து 'தீரம்' செய்த 'ஆகஸ்டு வீரர்கள்' தியாகிகள் பட்டியில் சேர்க்கப்பட்டுள்ளனர். செல்வமிழந்து, சீரழிந்து, புரட்சிப் பேச்சொலித்து, சிறை சென்று சிப்பி ஏந்திய சிதம்பரத்தை அறிந்தவர் சிலர் தான் அந்நாளில் இருந்தனர். தன்னை மறந்த தமிழகம், எடுப்பார் கைப்பிள்ளையாக இருந்த தமிழகம், தாழ் பூட்டில்லாத தமிழகம், உண்மை உணராத தமிழகம் வீரரை, தியாக சீலரை, அறிவின் அண்ணலை ஏற்றமுறையில் போற்றவில்லை!

**சிறை மீண்ட சிதம்பரனார்!**

"சுதேசிக் கப்பல் விட்ட துணிகரத்தான்—அதில்
துன்பம் பலசகித்த அனிமனத்தான்
விதேச மோகமெல்லாம் விட்டவனும்—இங்கே
விரசு தந்திரத்தை நட்டவனும்!"

ஆம்! 'வெள்ளையனே வெளியேறு' என்ற மூலக் கொள்கைக்கு வித்திட்ட விற்பன்னர் வ. உ. சிதம்பரனார் ஒருவர் தான். வெறும் கோஷத்தோடு இல்லாமல் கப்பல் கட்டி வெருட்டிய வீரர்! புரட்சியை விளைவித்தத் தமிழகம் சிதம்பரனார் சிறை மீண்ட காலை

சோர்வுடன் காட்சியளித்தது, சங்க நாதம் எழுப்பு வாரின்றி இளைஞர் துடிப்பை இழந்தனர். எனினும் வீர கர்ஜனை புரிவதை விடவில்லை வ. உ. சி. வறுமைப் பிணியும் கடன் தொல்லையும் பிடுங்கித்தின்றாலும் தொண்டின் ஆர்வத்தை இழக்கவில்லை. தன்னை மறந்தத் தமிழகம் என நினைத்து, நிந்திக்காமல் போராட்டக் காலத்தை எதிர் பார்த்துக் கொண்டிருந்தார். வக்கீல் சன்னத்தை இழந்தமையால் வாழ்க்கைச் செம்மையுற வசதி பெறமுடியவில்லை. வந்தவர்க் கெல்லாம் வரையாது வழங்கிய வ. உ. சி. அவர்கள் 'பிச்சைக்குப் பாரெல்லாம் ஓடும்' நிலை எய்தினர். அறிஞர்களுக்குத் தமிழகம் இழைக்கும் தீங்குகளை சிதம்பரனாருக்கும் அளிக்க மறக்கவில்லை!

**காந்தீயத்தில் கசப்பு!**

ஒத்துழையாமைத் திட்டத்தைப் பரிசிலனைச் செய்ய கல்கத்தாவில் காங்கிரஸ் மகா சபை 1920-ல் கூடிற்று. சிதம்பரனாரும் பிரதிநிதியாகச் சென்றார். காந்தியடிகளார் 'பஞ்சாப் படுகொலை, மிண்டோ மார்லி சீர் திருத்தம், வங்காளப் பிரிவினை ஆகியவை களைக் கண்டிக்கும் முகத்தான் அதிகார வர்க்கத் தோடு ஒத்துழையாமைப் போரைத் துவக்க வேண்டு மென' தீர்மானம் கொண்டுவந்தார். இத்திட்டப்படி பள்ளி, சட்டசபை, அலுவலகங்கள் அனைத்திலும் ஒத்துழையாமைப் போர் துவக்க வேண்டும் என்பது காந்தியடிகளது திட்டம். இவ்வேற்பாடு வ. உ. சி. அவர்களுக்குப் பிடிக்கவில்லை. 'கூடிக் கொல்லவேண்

டும்' என்ற அனுபவ அறிவு படைத்த வீரர் அதை எதிர்த்தார்; பயனில்லை. "ஒத்துழையாமை இயக்கம் பயனற்றது. காந்தியடிகள் கருத்துப்படி நடந்தால் பயன் பெறமுடியாது" என்றவாறு அறிக்கைவிட்டு தேசிய மகா சபையினின்று விலகினர். அதன் பின் சுமார் நான்கைந் தாண்டுகள் பொதுச்சேவையில் முழு நேரத்தையும் செலவழிக்காது ஒதுங்கி நின்று வந்தார். இருந்தாலும் தம் அபிப்ராயத்தை அவசியம் ஏற்பட்டபொழுது கூறாமல் இல்லை! அவரது உடல் நிலையும், சூழ் நிலையும் பூர்ண பொறுப்பேற்க வலுவும் பெறவில்லை. எனினும் உள்ளத்தின் ஆர்வத்தை எழுத்து மூலம் ஒலிபரப்பித் தான் வந்தார்!

**உள்ளம் நைந்தது ; உடல் தேய்ந்தது ; உயிர்......... !**

அறிவின் பூஞ்சோலை, தமிழரின் புரட்சிக்கனல், எழுச்சியின் உருவம், எங்கள் மானம் காத்த வீரர் வ. உ. சி. 1936-ல் நோய்வாய்பட நேரிட்டது. அதுவே இறுதிப் படுக்கை என செந்தமிழகம் எண்ணவில்லை. சுதந்திரத் திருநாடு காண கடுந்துன்பங்களை ஏற்ற எங்கள் சிதம்பரனுர் உடல் தேய்ந்து உள்ளம் நைந்து உயிர்விட்டார் நவம்பர் 18-ம் நாள் நள்ளிரவில்! ஆம்! தமிழரின் ஒரே தளபதி இறந்தார். சுதந்திர ஜோதி அணைந்த துயரச் செய்தியைக் கேட்டுத் தமிழகம் துடித்தது. கப்பலோட்டியத் தமிழன் உடல் மண் மேடிட்டது. தொண்டின் உருவம் மறைந்தது. ஆனல் அவர் எழுப்பிய வீர உரைகள், புரிந்த கர்ஜனைகள், ஊதிய சங்காதம், முழக்கிய

முரசொலி வெற்றியை அளித்தது ஆகஸ்டு 15—1947ல்! சிதம்பரனார் கண்ட கனவு நனவாகிறது; ஆனால் அந்த உத்தமன் சடலம் மறைந்து விட்டது— இல்லை—மானசீகமாக ஆசி நல்குகிறது வீரத் தியாகி களுக்கு!

**வீரர் நாமம் வாழ்க!**

"நாட்டில் சுதந்திரமே குறியாக—அதை
நாடி உழைப்பதுவே வெறியாக"

வாழ்ந்த வீரர் வ. உ. சிக்குத் தமிழகத்தில் தக்க நினைவுச் சின்னமில்லை. மறைந்த தளபதியின் நினைவாக மன்றமில்லை! ஜார்ஜ் டவுனையும், வெலிங்டன் ரோடையும், கோகலே ஹாலையும் கண்ட தமிழன் "சிதம்பரம் சாலை" யைக்கூட போட முடியவில்லை; முனையவே இல்லை! அடிமை நாட்டில் அஞ்சாமல் கப்பலோட்டிய வீரன் நாமம் என்றும் வாழ ஒன்றும் பொறிக்கப்படவில்லை. அந்தக்காலத்தில் வெள்ளையர் அழிவுக்கு வெடிகுண்டு தயாரித்த வீரர் வணக்கம் தமிழர் வாழ்வில் புகவில்லை. "தமிழகம் மறந்த தவப் புதல்வன்" என வெள்ளையன் சொல்லி நகையாடும் நிலைபெற்றுள்ளது இப்பொன்னாடு! வடநாட்டான் பெயரிலும், செயலிலும் மெய் மறந்த மறத் தமிழன் உறக்கம் விட்டகழும் காலம் வந்துவிட்டது. அநீதிக்கு அறப் போரிட்ட அறிஞர் வழிவந்த தமிழன் தன் இனத்தைக் காண முனைந்துவிட்டான். வீரர் வித்து முளை தளிர்விட ஆரம்பித்து விட்டது. அவர் சுரந்த அமுதம் வேலை செய்யும் காலம் தோன்றியுள்ளது.

தாய்நாட்டுப் பற்றில் தமிழன் எவர்க்கும் இனி தாழான் என முரசறைய முனைந்து விட்டான். எதிரி எவனும் இனி எதிர்ப்படான். "நல்லவர் நாட்டினை வல்லவர் தாழ்த்திடும் நச்சு மனப்பான்மை" ப் போக்கப் புறப்பட்டு விட்டான். "வ. உ. சி. வழி வந்த வீரப்படை" என பெருமை கூறி அவன் நாமம் வாழ்த்தி புறப்படுகிறது பெரும் படை! அப்படை வாழ்க; வெற்றி விளைக!!

**வாலிபர்களே!**

'வாலிபர்கள் உரிமைப் போர்ப்படையின் ஈட்டி முனை, அவர்தம் உள்ளத்தில் புரட்சிப்புயலிருக்கும்!' என அறிந்து கூறிய அறிஞர் அண்ணாதுரை பண்பு பெற்ற வீரர்களே! சுதந்திர இந்தியா பெற சுகமிழந்தோம். சோகம் பல வாழ்வில் பெற்றோம். துயர் வெஞ்சிறையும் பட்டோம். கொண்ட லட்சியம் வெற்றி பெற்றது. இனி திருப்புங்கள் உங்கள் திரு முகத்தைத் தீந் தமிழ்த திரு நாட்டுப்பக்கம்! அடிமை என்ற கூட்டத்தை ஆட்சிப்புரிகிறது ஒரு கூட்டம். செல்வமும் சிறப்பும் பிறப்புரிமை என செப்புகிறது. பொது உடைமைப் பூக்கவில்லை. புரட்சிக்கனல் எழ வில்லை. வீரர் விரும்பிய சமதர்ம தமிழ்க் குடியரசு தோன்றவில்லை. "பணம், பணம்—பசி, பசி" என்ற கூக்குரல் ஒழிந்தபாடில்லை. உயர்வு, தாழ்வு நசிந்த பாடில்லை வ. உ. சி. அழைக்கிறார் "வருக" என்று! அளிக்கிறார் அன்புரை ஒன்று!

வலியோர் சிலர் எளியோர் தமை
வதையே புரிகுவதா?
மகராசர்கள் உலகாளுதல்
நிலையாம் எனும் நினைவா?
உலகான உனது தாய் மிக
உயிர்வாதை அடைகிறாள்!
உதவாதினி ஒரு தாமதம்
உடனே விழி தமிழா!

•　　•

தலையாகிய அறமே புரி
சரி நீதி உதவுவாய்
சமமேபொருள் ஜனநாயகம்
எனவேமுர சறைவாய்!
இலையே உனை விலையே கதி
இனிமேலிலை எனவேமுர
சறைவாய் முரசறைவாய்!

*வ. உ. சி. கல்லறையினின்று வந்த வீரகர்ஜனையை ஒலிப்பதி வாக்கித்தருகிறார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசனவர்கள்! அறிஞர் அடிப்பற்றி அமைப்போம் தமிழ்க்குடி அரசு! வீரர் நினைவுச்சின்னம் எழுப்புவோம். "வெற்றி வீரத் தமிழர் நாமம் வாழ்க வாழ்க" என்று நித்தம் பாடி களிப்போம்!*

## நம் ஆட்சியில்!

ஆம்! அன்புத் தமிழர் ஆட்சியில் தான்! வரப் போகும் வீரத் தமிழ்க் குடி ஆட்சியில்தான்! தமிழ் அரசியல் மொழி. ஆட்சி நடத்துபவன் தமிழன். திட்டங்கள் அவன் நல்வாழ்விற்கு ஏற்றதாகவும் பிற இனத்தவரைத் தூற்றுத வாறும் இருக்கும். உண வுக்காக ஊரைவிட்டு தூரதேசம் சென்ற தமிழர் களைத் தாயகம் அழைப்போம். வெளி நாட்டான் கொண்டுச் சென்ற கலைச் செல்வங்களை மீண்டும் பெறுவோம். சிதறியத் தமிழகத்தைச் சேர்க்க முயலு வோம். வீரசிதம்பரனார் வேண்டிய சுதேசியத்தை வளர்ப்போம். எவ்வெவ்வகையில் தமிழனைத் தலை குனிய வைத்த வைரிகளையும் நிகழ்ச்சிகளையும் ஒழிப் போம். பழந்தமிழர் உண்மை வரலாற்றைப் புதுப்பிப் போம். கூடுகட்டி உள்ள கறையான்களையும், குள்ள நரிச்செயலாளர்களையும் வெருட்டுவோம். எவ்வகை யிலும் வீரசிதம்பரனார் திர உரைகளை எழுப்பிய வண்ணமாயிருப்போம். அவரது வழித்தோன்றல் களாக வாழ்வோம்!

## வேண்டுதல்!

வீரர் வரலாறு கண்டோம். புரட்சிப் பேச்சை செவி மடுத்தோம். தியாகத் தீயில் புடம்போட்ட சொக்கத் தங்கம் நம் சிதம்பரனார். அவரது தொண் டிற்குத் தமிழகம் நன்றி செலுத்த நல்லதொரு நினைவு மன்றம் தோன்ற ஏற்பாடு செய்ய வேண்டும். மறவர் பிறந்த தூத்துக்குடியை சிதம்பரனார் நகராக்க வேண் டும். சுதந்திரக் கப்பலை வீரமாய் ஓட்டிய நீலக் கட

லருகே, நிரரின் சிலை சிறுவ வேண்டும். தமிழக மெங்கும் திருநாளாகக்கொண்டாட அரசியலார் விடுமுறை அளிக்க வேண்டும். அவர் நாமத்தில் பல்கலைக் கழகம் தோற்றுவித்து வீரர்களை, வீராங்கனைகளைப் பெருக்கவேண்டும். சிதம்பரனார் பெரும்படைத் திரட்டித் தமிழர் நல்வாழ்விற்கான திட்டங்களை ஏட்டோடு இல்லாமல், நாட்டிலும் பரவச் செய்ய வேண்டும். சுதந்திரத் தமிழ்க் குடி அரசில் 'சிதம்பரன் கப்பல்' முதலாவதாக ஓட்டி பழந் தமிழர் கடல் வாழ்வை நிலைபெறச் செய்ய வேண்டும். அவர் புகழ் எங்கும் ஓங்கவேண்டும்.

வாழ்க தமிழ் நாடு!

வீரத்தில் நிறைவான தமிழ் நாடு வாழ்க!
வித்தைக்கு உறைவான தமிழ்நாடு வாழ்க!
தூரத்தின் துணையான தமிழ்நாடு வாழ்க!
துட்டருக்குப் பணியாத தமிழ்நாடு வாழ்க!
படையாமல் உண்ணாத தமிழ்நாடு வாழ்க!
பகையாரும் எண்ணாத தமிழ்நாடு வாழ்க!
அடையாத துன்பங்கள் அவைவந்தபோதும்
அநியாயம் எண்ணாத தமிழ்நாடு வாழ்க!
வாள்கொண்டு நேர்நின்று போர் தந்தபோதும்
வஞ்சகங்கள் புரியாத தமிழ்நாடு வாழ்க!

(நாமக்கல் கவிஞர்)

தான் பணியாத தீரர், தண்டமிழ்த் தொண்டர்
வீரர் வ. உ. சி. வாழ்ந்த தமிழ்நாடு வாழ்க!

("இ. பி.")

வாழ்க வ. உ. சி. நாமம்!

சிட்டி பிரஸ், மதுரை ரோடு, திருச்சி—2000.

# தூங்கும் எரிமலை!

★

எரிமலைகளுள் பலரகங்கள் உண்டு. கனிந்து கொண்டே இருக்கும் சில; கிளைத்தால் கனல் கக்கும் ஒரு சில; உயிருக்கே உலை வைக்கும் வெகு பல! கொதித்தெழும் தீக் குழம்பை உள்ளடக்கி உருமாறி இருப்பவைகளும் உண்டு!

இந்த இலக்கணப்படியும் மனிதவர்க்கத்தில் சிலர் இருக்கின்றனர்; இந்தத் திருநாட்டிலும் இல்லாமல் இல்லை! சாதுவாக இருப்பார்கள், சமயத்தில் குதை அதிர்ந்தால் வருதுவரினும் விடாது கேடயம் தூக்கிப் போர்முரசக் கொட்டுவர். "ஏ அப்பா! இவரா? பொறுமையின் பூஷணமாச்சே! புரட்சியைக் கண்டு மருட்சியடையக் கூடிய இவரா. புரட்சிக் கர்த்தா? இருக்காது" என்று உடலைப் பார்த்த மாத்திரத்திலேயே உள்ளத்தில் படம் பிடிப்பர் பலர். இதுதான் நீறுபூத்த நெருப்பு-தூங்கும் எரிமலை என்பதை எப்படி அறிவார்கள் அந்த 'அந்தப்புர உல்லாசிகள்'!

தமிழகத்தின் தவப்புதல்வர்! தமிழ்ப் பெரியார்! சமதர்ம முனி! அறிவின் எல்லை! இலக்கியப் பூஞ்சோலை! தமிழ்த் தென்றல்...! அவர் யார்...! அவரா...!

பிச்சமூர்த்தியின்

பேனாச் சித்திரத்தில் காணுங்கள்!

இது ௧௩ சமதர்ம நிலைய வெளியீடு!